REGD. M. 4042

# திராவிட நாடு

விலை அணா 2   ஆண்டுசந்தா ரூ 7   இலங்கை 15 சதம்   மலாய்நாடு 12 காசு

மலர் 6 | 18—4—48 | இதழ் 45

## மலையேறிவிட்டது

—:(o):—

"தொழிலாளரை, உப்பு, புளி போல் குறைந்த விலைக்கு மார்க்கெட்டில் வாங்கி விடக் கூடிய பண்டங்களாகக் கருதிய காலம் மலையேறிவிட்டது. நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்து, இலாபம் சம்பாதித்துக் கொடுப்பவர்களை முதலாளிகள் தங்களுடன் சமபங்காளிகளாகவே பாவித்தல் வேண்டும்."

ஜகஜீவன்ராம்
10—4—48

## என் வாழ்வு

16-ம் பக்கத் தொடர்ச்சி

ரோஜாவா, மல்லியா, என்பதல்ல. மது, மது, அது எங்கெங்கு கிடைக்கிறதோ அங்கெல்லாம் வண்டு சென்றேதீரும். மாதர்கள் கூட்டத்தை ஆண் வண்டுகள் மலர்ச்சோலையாகவே மதிக்கின்றன. சில சோலையிலே காவலாளி இருப்பது போல் பெண்கள் கூட்டத்திலே ஒரு பகுதிக்கு, கட்டும், காவலும், ஆளும் அம்பும் இருக்கிறது. எங்கள் கூட்டமோ கட்டு, காவல், வேலியற்ற தோட்டம்! இந்தச் சோலையிலே நானோர் புஷ்பம். கணபதி சாஸ்திரிகளைப்போன்ற வண்டுகள் வரட்டும். வண்டு தேன் மொண்டு உண்டு போவதை நான் அறிவேன். ஆனால் மதுவில் மயங்கிடச்செய்வேன். கணபதிசாஸ்திரியானாலென்ன, சுப்பிரமணியபிள்ளையானாலென்ன? யாரானாலும், எனக்கு உபயோகமாக வேண்டும். இல்லையேல், விரட்டுவேன். என் இளமை இதழ், கண்டுவரும் வண்டை குற்றேவல் புரியச் செய்வேன். செய்தால் மது கிடைக்கும் என்பேன். செய்தானதும் அதனைச் செயலற்றதாக்குவேன். மற்றும் ஓர் வண்டு வரட்டும்! மாறிமாறி, மேலும் மேலும், வித விதமான வண்டுகள் வரட்டும். வண்டுகளுக்கு வதையாவதற்குள், வண்டுகளை, மலர் வதைக்கட்டும். எந்த ஆடவனையும், என் காரியத்தை நடத்திக் கொள்ளக் கருவியாக்கியே தீருவேன். என் அழகுக்கு அவன் அடிமை! அவனை அடிமையாகவே நடத்துவேன். ஆம்! ஆண்கள் பெண்களின் பெருமையை மதித்துநடக்கும் காலம் வரும். நான் அககாலத்தில் இருக்க மாட்டேன். நான் வாழும் இது, இடைக்காலம், என்று நான் தீர்மானித்தேன். சஞ்சலம் வளர வளர இந்த என் உறுதியும் வளர்ந்தது. இந்த உறுதி வளர்ந்ததும், நான் ஆடவர்கள் தாமாக மயங்கி என்னை அணுகுவதற்கு முன்னமேயே, அவர்களை மயக்கவைக்க வேண்டிய முறைகளைக் கையாள வேண்டும் என்றும் தீர்மானித்தேன். அக்கா சோகத்தால் ஆழ்ந்தாள். உலகை வெறுத்தாள். என் சோகம் எனக்கோர் புதியசக்தியாகமாறிற்று. நான் சாகசக்காரியானேன். டாக்டரே! அந்தக்காலத்தில் நீர் என்னைக்கண்டதில்லை. கண்டிருந்தால், என் கண் ஒளி உமது இருதயத்தைப் பிளந்துவிட்டிருக்கும். என் கழுத்தின் அசைவு உமது உடலத்தையே குலுக்கிவிட்டிருக்கும். என் சிரிப்பு உமக்கு வீணையாக இருந்திருக்கும். மேனியை மினுக்க நான் வித விதமான முறைகளைச் செய்து கொண்டேன். வறுமை எங்களைத் தொடலாயிற்று. ஜமீன்தாரரின் கோபம் எங்களைச் சூழ்ந்துகொண்டு கொக்கரித்தது. அக்காவின் பெருமூச்சு அதிகரித்தது. அம்மாவின் "பக்தி" பண நஷ்டத்தையும் வீண் சிரமத்தையும் வளர்த்தது. ஆனால் நானோ! உலகை நோக்கிச்சிரித்தேன்! உன்னை ஒருகை பார்க்கிறேன் என்று கூறினேன்.

ஜெமீன்தாரரின் சீற்றத்தைப் பற்றி அலட்சியமாகப் பேசினேன். விறைத்து நோக்கும் வாலிபர்களை நேருக்கு நேர் பார்க்க ஆரம்பித்தேன். தடுமாற்றமடையும் பேர்வழிகளைக் கண்டு கேலி செய்தேன். நான் ஓர் புதுப்பெண்ணானேன். வலை வீசும் வனிதையானேன். வலை வீசும் முன்பே வந்தவர் கணபதி சாஸ்திரிகள். அந்தவயோதிகருக்கு வலைஏன்?

(தொடரும்)

## விந்தையான பரிசு

13-ம் பக்கத் தொடர்ச்சி

ணானைச் சேரமன்னன் வணங்கியதில் தவறேதும் இல்லை. வண்ணானே சிவன், சிவனே வண்ணான் — இருவரும் பெயரளவில் வேறாகப் பேசப்பட்டபோதிலும், செயலளவில் இருவரும் ஒருதன்மை வாய்ந்தவர்களே என்று கூறிப்பிறைசூடி அன்பர்கள் பெருமிதம்கொள்வரோ! யார் கண்டார்கள்?

ஆனால், வண்ணாரின் நிலையும், அவர்களையொத்தபிற தொழில்களைச் செய்யும் மக்களின் நிலையும் துளியும் மாறவில்லை என்பதையும், அவர்கள் சிவனுடைய பெயரைச் சொன்னாலே, சிவன் தீட்டுப்பட்டு விடுவார் என்று கருதப்படுவதையுமே இன்று நாம் காண்கிறோம். வண்ணான், சிவனாக மாறவேண்டுமென்று நாம் கூறவில்லை. ஆனால், அவனும் மனிதன் தான், மற்ற மக்களுக்கிருக்கும் சுதந்தரமும் உரிமையும் வண்ணானுக்கும், தொழில்காரனாக ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும் அனைவருக்கும் இருக்க வேண்டுமென்று கூறுகின்றோம். மக்கள், மக்களாகவே மதிக்கப்பட வேண்டுமென்று கூறுகின்றோம். புராணத்தில் பேசப்படும் சமத்துவம் நடைமுறைக்கு உதவாதென்று கூறுகின்றோம். சேர மன்னனால் ஒரு வண்ணான் வணங்கப்பட்டான் என்பதற்காக, வண்ணார் எவரும் எந்த மன்னராலும் இன்று வணங்கப்படவில்லை. எனவேதான், இத்தகைய ஏட்டுச் சுரைக்காயை வைத்துக்கொண்டு நாட்டை ஏய்க்க வேண்டாமென்று கூறுகின்றோம்.

இக்கட்டுரையில் ஆங்காங்கு "வண்ணான்" என்ற சொல் கூறப்படுவதைக்கண்டு, நாம், குறிப்பிட்ட ஒரு சமுகத்தை இழிவு படுத்த அந்தச்:சொல்லைப் பயன் படுத்தியதாக எவரும் கருதி விடக்கூடாது. சைவ மெய்யன்பர்களும், வைதிகர்களும் ஒரு சமுகத்தை எப்படி அழைக்கிறார்கள் என்டதை எடுத்துக்காட்டவே, அந்தச்சொல்லைப் புராணத்தில் உள்ளபடியே இங்கு வெளியிட்டிருக்கிறோம்.


# "பாசறை"

(தமிழ்த்திங்கள் வெளியீடு)

ஆசிரியர் வே. நாசிம்மன், (அரசாங்க கல்லூரி மாணவன்)

மே மாதம் முதல் தேதி வெளிவரும்

முதல் இதழில்

பெரியார் ஈ. வே. ரா, புரட்சிக் கவிஞர் பாரதி தாசன், ஏ. பி. ஜனார்த்தனம், மா. இளஞ்செழியன், முத்தமிழ்மணி, இராதாமணாளன், திருமதி வ. பா. தாமரைக்கண்ணி, மற்றும் பலர் எழுதுகின்றனர்.

**தனிப் பிரதி விலை அணா 4 ஆண்டு சந்தா ரூ. 3**

விலாசங்கட்கு:—

## பாசறை நிலையம்

நெ. 6, குமாப்பமுதலி தெரு, சென்னை, 1,

# விந்தையான பரிசு!

[நக்கீரன்]

புதிதாக அரசுரிமை பெற்ற மன்னன், யானை மீதமர்ந்து ஊர்வலம் வருகின்றான். அந்தச் சமயம் ஒரு வண்ணான் எதிரில் வருகின்றான். அவனை கண்டதும், மன்னன் யானையை விட்டிறங்கி அந்த வண்ணானைக் கும்பிடுகின்றான். அரசன் தன்னை வணங்கியதைக்கண்டு அச்சங்கொண்ட வண்ணான், "சிறியேன் அடி வண்ணான்" என்று கூறுகின்றான், அதற்கு அம்மன்னன், "அடியேன் அடிச்சேரன்" என்று பதில் கூறுகின்றான்.

* * *

"என்னப்பா இது! விந்தையாக இருக்கிறதே! யானைமீதமர்ந்து ஊர்வலமாக வந்த ஒரு மன்னன், வழியில் வந்த வண்ணானைக் கண்டதும், யானையை விட்டிறங்கி அவனைக் கும்பிட்டான் என்று கதை அளக்கிறாயே! இப்படியும் ஒரு நிகழ்ச்சி நடந்திருக்குமா" என்று கேட்கத் தோன்றும் உங்கட்கு.

ஒரு நாட்டை ஆளும் மன்னன் ஊர்வலமாக வருகின்றான்—அதிலும் புதிதாக அரசுரிமையை ஏற்று அரண்மனைக்கு அழைத்துச் செல்லப்படும் ஒரு புதிய மன்னன் ஊர்வலமாக வருகின்றான் என்றால், அவன் மட்டுமா தனியாக வந்திருப்பான்? அவன் ஆளுகைக்குஉட்பட்ட மக்கள் அனைவருமே அந்த ஊர்வலத்தில் கலந்திருப்பாரன்றோ! அப்படிப் பெருந்திரளான மக்களின் மத்தியில் ஊர்வலமாக வந்த ஒரு மன்னன், அந்த மக்களையெல்லாம் விட்டுவிட்டு, வழியே வந்தவண்ணான் ஒருவனைக் கண்டதும்,யானையைவிட்டுக் கீழே இறங்கி, விரைந்து சென்று அவனை மட்டும்கும்பிட்டான் என்று கூறுவதைக் குற்றமாகக் கூடச் சிலர் கருதக்கூடும்.

ஆனால், சைவத்தின் உயர்வையும் திருநீற்றின் பெருமையையும் உணர்ந்த எவரும் இதனை நிகழாத நிகழ்ச்சியென்றோ, குற்றம்படக் கூறப்பட்டதென்றோ ஒருபோதும் எண்ணமாட்டார்கள். ஒரு மன்னன், ஒரு வண்ணானைக் கும்பிட்டதற்கும், சைவம்—திருநீறு ஆகியவற்றின் உயர்வு—பெருமைக்கும் என்ன தொடர்பு? மன்னர்கள், வண்ணாரைக் கண்டால் கும்பிடவேண்டுமென்ற கோட்பாடு (விதி) ஏதாவது சைவ சமயத்தில் உண்டா? என்றால், இல்லை என்றுதான் சைவத்தைப் பற்றிச் சரியாக உணராத அரைகுறைச் சைவர் கூறுவர். ஆனால், சைவத்தின் உயர்வையும் அதன்சிறப்பையும் முற்றிலும் உணர்ந்த—பழுத்த முழுச் சைவப் பெருமக்கள் இதனை ஒப்புக்கொள்ளாமல் இருக்கமாட்டார்கள். ஏனென்றால், சைவத்தின் உயர்வு திருநீற்றில்தான் அடங்கியிருக்கிறது. சைவத்தின் சிறப்பை விளக்கும் இருபெரும் பொருள்களில் திருநீறுதான் முதல் இடம் பெறுகின்றது. சைவ மெய்யன்பர்கள், தாங்கள் இன்ன சமயத்தைச் சார்ந்தவர்கள் என்பதன் அறிகுறியாகத், திருநீறும், அக்கமணியும் அணிந்து கொள்வார்கள். என்றாலும், சைவர்கள் எல்லாருமே அக்கமணி (உருத்திராட்சம்) அணிவதில்லை. சிலர் அணிவர்—பலர் அணியமாட்டார்—அக்கமணி அணிந்த சிலரிலும் ஒரு சிலர்தான், தாங்கள் அக்கமணி அணிந்திருப்பதை அனைவரும் அறியும்படி காட்டிக்கொள்வர். சிலர் இருக்கிறார்கள், அக்கமணி அணிந்திருப்பார்கள், ஆனால் அதை யாரும் பார்க்க முடியாது. யாராவது பார்த்துவிட்டால் தீட்டு ஏற்பட்டுவிடும் என்பதற்காக அதனை அவர்கள் மறைத்துக் கொள்கிறார்கள்; இதில் என்ன தவறு என்று நீங்கள் நினைப்பீர்கள். ஆனால், அக்கமணி அணிந்து கொண்டிருப்பதை யாரும் பார்க்கக்கூடாது—பார்த்தால் தீட்டு என்பதாக எந்தவிதமான சட்டமும் சைவசமய நூல்களில் கிடையாது. திருநீறு, அக்கமணி ஆகிய இரண்டும் சைவத்தை விளக்கும் சிவ அடையாளங்கள் என்றும், அவற்றை மறைக்காமல் வெளிப்படையாகவே சைவர்கள் எல்லாரும் அணிந்து கொள்ளுதல் வேண்டும் என்றுமே சைவ நூல்களில் எல்லாம் கூறப்பட்டுள்ளது. அப்படியிருக்கச் சிலர் அதனை மறைத்தணியக் காரணம் என்ன? அதற்குரிய உண்மையான காரணத்தை வெளிப்படையாகக் கூறித்தான்ஆகவேண்டுமானால், கால மாறுதல், அப்படிப்பட்டவர்களைக் கண்டால் பரிகசிக்கக் கூடிய நிலைமையை உண்டாக்கிவிட்டதே இந்த இருட்டடிப்புக்குக் காரணமாகும். அக்கமணி போன்ற சமயக்குறிகளை அணிவது அநாகரிகம் என்று கருதுமளவுக்குக் காலப்போக்கில் மாறுதல் உண்டாகி வருவதைக் கண்டே அவர்கள் அவ்விதம் மறைத்துக் கொள்கிறார்கள்.

இனித், திருநீறு அணிபவர்கள் எல்லாருமே அதனை வெளிப்படையாக அணிகிறார்கள் என்று கூறுவதற்கும் இல்லை. சிலர், வீட்டில் இருக்கும்போது மட்டும் அணிந்து கொள்வார்கள். வெளியே புறப்படும்போது அழித்துவிடுவார்கள். சிலர், வெளியே புறப்பட்டுப் போகும்போது திருநீறு அணிந்துகொண்டு சென்றாலும், சிறிது தொலைவு சென்றவுடன் அழித்துவிடுவார்கள். சிலர், வீட்டிலிருக்கும் போதும் அணிந்துகொள்வார்கள்; வெளியில் போகும்போதும் அணிந்துகொள்வார்கள்; ஆனால், அவர்கள் போக வேண்டிய இடத்தை அடைந்து உள்ளே நுழையும்போது, கால் சட்டைக்குள் இருக்கும் கைக்குட்டையை எடுத்து நெற்றியைச் சுத்தம் செய்துவிட்டுத்தான் உள்ளே நுழைவார்கள். இன்னும் ஒரு சிலர் இருக்கிறார்கள், பூசை அறையை விட்டுக் கூடத்துக்கு வரும்போதே நெற்றியை நன்றாகத் துடைத்துத் துப்புரவாக்கிக்கொண்டு வருபவர்கள். வேறு சிலர் இருக்கிறார்கள், யாராவது திருநீறு கொடுத்தால், அதனை வாங்கிக்கொள்வார்கள்; ஆனால் அணிந்துகொள்ள மாட்டார்கள். மற்றும் ஒரு சிலர் இருக்கிறார்கள், திருநீற்றின்சிறப்பைப் பற்றிச், சிவாகமங்களில் கூறப்பட்டிருப்பவை அனைத்தையும் எடுத்து விளக்கி மற்றவர்களுக்குக் கூறுவார்கள்; ஆனால், தாங்கள் மட்டும் அதனை அணியமாட்டார்கள். இவ்விதம் திருநீறு அணிபவர்களில் பலவித முறைகளைக் கையாளுபவர்கள் இருக்கிறார்கள். இவர்கள் எல்லாரும் திருநீற்றின் சிறப்பை எடுத்துக்கூறும் சிவாகமங்களின் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு நடப்பவர்களாகச் சொல்லி நடிப்பவர்களாகும். ஒருவர்

கூடத் திருநீற்றை, அதனை அணிய வேண்டிய முறைப்படி அணிவது கிடையாது. என்றாலும், அவர்கள் தங்களைச் சைவநெறி பிறழாப் பெருந்தகையினர் என்று பிதற்றுவதில் மட்டும் பின்வாங்குவதில்லை. சமயம்போல் தங்கள் சித்தாந்தங்களைப் பேசிப் பெருமிதம் கொள்வர்.

"மந்திரமாவது நீறு"

என்று தொடங்கி,

"நீறில்லா நெற்றி பாழ்"

என்று கூறி

"நீற்றைப் புனைந்தென்ன
நீராடப் போயென்ன"

என்று அடங்கி,

"வேட்டியுந் தாழ்வடமும்
வெண்ணீறும் வெண்யல்லும்,
காட்டுவது ஞானக்களவு
காண்."

என்று வேதாந்தம் பேசிக்,

"கூலித் தொழிலாளர்
கோண்டு விற்போர்"

போன்று, வெற்றுரைகளை வீசிக் கொண்டே இருப்பர்.

இனி, யானைமீதமர்ந்து ஊர்வலம் வந்த மன்னன், வழியிலே வந்த வண்ணானைக் கண்டதும், யானையை விட்டிறங்கி அவனை ஏன் கும்பிட்டான் என்றால், அந்த வண்ணான் திருநீறு அணிந்திருந்தான். திருநீற்றைத் திருநெறியாகக் கொண்ட மன்னன், திருநீறு பூசிய ஒருவனைக் கண்டதும் அவனைக் கும்பிட்டான். இதிலென்ன தவறு என்றுதான் நீங்கள் நினைப்பீர்கள். திருநீற்றினிடம் பற்றுக்கொண்ட ஒருவன், அதனை அணிந்துவந்த ஒருவனைக் கண்டால், அவனுக்கு மதிப்புக் கொடுப்பதும், திருநீற்றினிடம் அளவுகடந்த காதல் கொண்டுள்ளவன் அவனைக் கும்பிடுவதும் சைவ சமய முறைப்படி குற்றமாகாது; நாமும் அதனைக் குற்றம் என்று கருதிக் குறைகூறவில்லை. நாமென்ன

சும்மா இருக்க வைத்த
சூத்திரமாம் சாத்திரத்தை

விம்பிக்கதறி வீண்வேலை செய்பவர்களா? அல்லது, வெயிலும் மழையும் நம்மீது படாது தடுப்பதற்காகக்குடை பிடித்துக்கொள்வதும்; காலில் கல் முள் தைக்காமல் இருப்பதற்காகச் செருப்புப் போட்டுக் கொள்வதும் என்ற இலகுவான முறையை விட்டு, அல்லது மறந்து, மழையையும் வெயிலையும் தடுப்பதற்காக ஆகாயம் முழுவதையும் பந்தல் போட்டு மறைப்பதும்; கல் முள், காலில் தைக்காமல் இருக்கவேண்டுமென்பதற்காக நிலம் முழுவதையும்பாயால் மூடுவதுமான முட்டாள்தனமான காரியங்களைச் செய்பவர்களா? இப்பட்டவர்கள்தான், திருநீறு அணிந்து வந்த வண்ணானைத், திருநீற்றில் பற்றுக்கொண்ட ஒரு மன்னன் கும்பிட்டதைக் குற்றமாகக் கூறுவர்.

அங்ஙனமாயின், குற்றமற்ற ஒரு நிகழ்ச்சியை எடுத்து வைத்துக் கொண்டு, அதில் ஏதோ குற்றமிருப்பதாகக் கருதி, அதனை ஆராய்வதன் நோக்கந்தான் என்ன என்று கேட்பீர்கள். அதனைத்தான் நான் இங்கு கூறப்போகின்றேன். அந்த வண்ணான் அணிந்து வந்தது திருநீறு அல்ல. திருநீறு அல்லவா? அப்படியானால் அவன் அணிந்து வந்தது தான் என்ன? அவன் ஒன்றுமே அணிந்துவரவில்லை, அவன் உடம்பில் உவர்மண்படிந்திருந்தது. அதாவது, அந்த வண்ணான் துணிவெளுப்பதற்காக உவர்மண் மூட்டை ஒன்றைத்தோளில் வைத்துக்கொண்டு வந்தான்; வழியில் மழை பெய்தது; உவர்மண் கரைந்து உடம்பு முழுவதும்படிந்து; பின்னர்வெயில்படவே, உடம்பில்படிந்திருந்த உவர்மண் வெண்ணிறமாகக் காட்சியளித்தது. அந்த வண்ணான் உடம்பில் படிந்திருந்த உவர்மண்ணால் ஏற்பட்ட வெண்ணிறக் காட்சியே மன்னனுக்குத்திருநீறாகத் தெரிந்தது.

இதில் என்ன தவறு? தொலைவில் வந்த வண்ணானுடையஉடம்புவெண்ணிறமாகக் காட்சியளிக்கவே, திருநீற்றில் பற்றுக்கொண்ட மன்னன், அவன் திருநீறுதான் அணிந்திருக்கின்றான் என்று கருதி அவனைக்கும்பிட்டது ஒரு தவறா என்று கேட்பீர்கள். இதனையும் நான்தவறென்று கூறவில்லை.

"ஆவுரித்துத் தின்றுழலும்புலை
யரேனும் கங்கைவார் சடைக்
கரந்தார்க்கு அன்பராகில்
அவர் கண்டீர் நாம் வணங்கும்
கடவுளாரே"

என்ற முறைப்படி, அந்த மன்னன் வணங்கினான் என்றால், சைவ சமயக் கோட்பாட்டின்படி அவன் அங்ஙனம் செய்ததில் தவறேதும் இல்லை என்றும் கூறலாம். ஆனால், அந்த வண்ணான், கங்கையைச் சடையில் மறைத்து வைத்துக்கொண்ட சதாசிவனுக்கு அன்பனா அல்லவா என்பதை அறியப் புராணத்தில் எவ்வித சான்றும் காணப்படவில்லை. ஒருவேளை, அந்த வண்ணானும், கங்கையைச் சடையில் மறைத்து வைத்திருக்கும் சிவனைப் போலவே, தன்னுடைய சிவஅன்பையும் வெளிக்குக் காட்டாது மறைத்து வைத்திருந்திருக்கலாம். அத்தகைய அன்புப் பெருக்கு வண்ணானிடம் இருப்பதை அறிய, நாமென்ன அவனருள் பெற்ற அடியார்களா? எனவே, அந்த ஆராய்ச்சியை விட்டு விடுவோம்.

இனி, அந்த மன்னன், வண்ணானைக் கண்டதும், அவன் உடம்பில் திருநீறு பூசப்பெற்றிருப்பதாகக் கருதி அவனைக் கும்பிட்டது குற்றம் என்பதை மெய்ப்பிக்கும் பகுதியை இங்கு ஆராய்வோம்.

மலையாளநாட்டிலே, சேரர்மரபிலே பெருமாக்கோதையார் என்பவர் ஒருவர் இருந்தார். இவர், "உலகஇயல்பும் அரச இயல்பும் உறுதியுள்ளன அல்ல" என்ற முடிவுக்கு வந்து, சிவனடியாரானவர். இஃதிவ்வாறாகச், சேரநாட்டை ஆண்டுவந்த செங்கோற்பொறையன் என்ற மன்னன், தவம் மேற்கொண்டு வனம் புகுந்தான். அதுகண்ட அமைச்சர்கள், பெருமாக்கோதையாரை அணுகி அரசுரிமையை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக் கொண்டார்கள். உலக இயல்பும் அரச இயல்பும் உறுதியுள்ளன அல்ல என்ற முடிவுக்கு வந்து, சிவனடியார் கோலம் கொண்டு இருந்த பெருமாக் கோதையார் இதனைக் கேட்டதும், உடனே சிவனிடம் விண்ணப்பம் செய்தார். சிவன், அவரை அரசியலில் நுழையுமாறு கட்டளையிட்டார். கட்டளையிட்டதோடு, அவருக்கு, எல்லாவற்றையும் தாமாகவே உணரும் ஆற்றலையும், அழியா வீரத்தையும், பெருந்தொகைப் பணத்தையும், படை வாகனம்முதலியனவற்றையும் கொடுத்தனுப்பினர். சிவனாரின் இந்தக் கொடையை விளக்கப்புகுந்த சேக்கிழார்,

"மேவும் உரிமை அரசளித்தே
விரும்பு காதல் வழிபாடும்,
யாவும் யாரும் கழறினவும் அறி
யும் உணர்வும் ஈறில்லாத், தாவில்
விறலும் தண்டாத கொடையும்

(13-ம் பக்கம் பார்க்க)

# சிங்கம் சிறுநரிமுன்

## சிந்து பாடுகிறது!

—✲✲—

### டில்லியில் பெர்லின்

—✲✲—

டாட்டாக்களும் பிர்லாக்களும் தோன்றியிராவிட்டால், நாட்டு விடுதலையோ, முன்னேற்றமோ, சாத்தியமாகி இருக்குமா!!

தைரியமாகக் கேட்டார்! ஒளிவு மறைவு இன்றி, கூச்சம் அச்சம் இன்றி, குளறாமல், பாராளும் மன்றத்திலே, பட்டப்பகலிலே, யாருடைய காதும் கெட்டுப் போகாதிருக்கும்போதே, இப்படிப்பட்டபேச்சைக் கூறுகிறாரே, இதைக்கேட்டு, ஏளனச்சிரிப்புக் கிளம்புமே அந்தச் சிரிப்பு போதுமே நமது நிலைமையை நசுக்க என்றும் எண்ணாமல், விடுதலை வீரர்கள் விவேகிகள், இலட்சியவாதிகள் வெளி உலகத் தொடர்புடையோர் என்ற விருது படைத்தவர்கள் நிரம்பிய மன்றத்திலே, ஏழையின் வாழ்விலேஉள்ள இருளைத் துடைப்போம், ஏழையின் இரத்தம் சிந்தப்பட்டதாலே தான் நாடு விடுபட்டது, என்று பலப்பல முறைபேசி, ஏழையின் வாழ்விலே புது மலர்ச்சி ஏற்படுத்தப் போகிறோம், அதற்கே இப்போது கிடைத்துள்ள அதிகாரத்தை, புதிய அந்தஸ்த்தை, பயன்படுத்தப் போகிறோம், என்று மார்தட்டிக் கூறிடும் மாவீரர்கள் முன்னிலையில், பல நாட்டுவரலாறுகளைப் படித்தறிந்து, இந்தநாடு, பொன்னாடு ஆவதற்கு, என் ஆற்றலும் ஆண்மையும் அறிவும் பயன்படுமாக எனச் சூள் உரைத்து, இளைஞரின் உள்ளங்களுக்கு, இலட்சியத்தை வாரிவாரித் தந்து, அவர்களின் தலைவர் என்ற நிலைபெற்ற, பண்டித நேருவின், காதில்விழும்படிபேசினார். உழைத்து அலுத்தவர் அல்ல, ஊராள்வோரிடம் போரிட்டு, உடலிலும் உள்ளத்திலும் தழும்பு ஏறப்பெற்றவரல்ல, மேனி மினுக்கி வாழ்வும் மேதை என்ற நிலையும், சீமான் அந்தஸ்தும் குபேர புரிவாழ்வும், பெற்று விளங்கும், சர். சீவத்சவா என்பவர், அஞ்சாது—ஆணவத்தோடும் என்று கூறலாம்—கேட்டார் டாட்டாக்கள் தோன்றியிராவிட்டால் இந்தநாடு, என்னநிலையில் இருந்திருக்கும்? என்று!

டாட்டா எனும் பார்சிசீமான் இந்தியாவிலே, முதன் முதலாகப் பருத்தி ஆலை துவக்கினார். படிப்படியாக முன்னேறினார் — இரும்புத் தொழிலில் இலாபத்தை ஏராளமாகத் திரட்டி, — தங்கக் கோட்டையிலே, வீற்றிருக்கிறார். இவருடைய தர்பாரிலே உள்ள பல பராக்குக் காரர்களில், இந்த சீவத்சவா என்பவர் ஒருவர். இவருடைய முழுப்பெயர், ஜ்வாலாபிரசாத் சீவத்சவா. சர்க்கார் தந்த 'சர்' பட்டமும் உண்டு. இந்திய சர்க்காரிலே, பதவி வகித்தவர்— காங்கிரஸ் காடாண்ட போது நாடாண்ட இந்த நற்குணவான் காங்கிரஸ் நாடாளும் நாட்களில், பாராளும் மன்றத்திலே, டாட்டாவின் கீர்த்தியைப் பாடுகிறார், தைரியமாக! அந்தத் தைரியம் எப்படிப் பிறந்தது? ஐந்தாண்டுகளுக்கு முன்னம், இரண்டாண்டுக்கு முன்பு, ஏன், ஆகஸ்ட்டுக்கு முன்பு, எந்த முதலாளியாவது, அல்லது அவருடைய ஏஜண்டாவது இதுபோல் பேசத்துணிந்திருக்க முடியாது. இன்று அந்தத் துணிவு ஏற்பட்டதற்குக் காரணம் இருக்கிறது. முதலாளித்துவம், தன் சக்தியை உணர்ந்து கொண்டிருக்கிறது. அதுகூட அல்ல முக்கியமான விஷயம், முதலாளித்வம், தனக்குள்ள சக்தியைக்கண்டு, நாடாளும் காங்கிரஸ் கிலிகொண்டிருக்கிறது என்பதையும் அறிந்து கொண்டிருக்கிறது. எனவேதான், தைரியமாகப் பேசத்தலைப்பட்டு விட்டனர், முதலாளித்வ ஏஜண்டுகள்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்ய, ஆட்சியைக் கண்டித்து, கடைவீதிகளிலும் கடற்கரையோரங்களிலும், கோயில் மண்டபங்களிலும் குளக்கரைகளிலும், மாநாடுகளிலும், பேசியவர்கள், என்னென்ன கூறினார்கள்— அந்த ஆட்சியின் அவலட்சணத்தை விளக்கும்போது என்னென்னகூறினர். பொதுமக்களுக்கு அரசியல் பிரச்னைகள், சம்பவங்கள் சம்பந்த [illegible] யங்கள்கூடவா மறந்துவிடும்! பிரிட்டிஷ் ஆட்சி, தான் சுறண்டுவதோடு, கூட்டுக் கொள்ளைக்காரர்கள் போல, சுறண்டும் வேலைக்குப் பல 'சகாக்களை' வைத்துக் கொண்டிருக்கிறது, இந்தச் சகாக்கள் தான், சிற்றரசர்களும் சீமான்களும்! —என்று கூறவில்லையா! ராஜாதி ராஜர்களின் லீலாவிநோதங்களைப் பற்றி, அவர்களின் அந்தப்புறத்திலே உள்ள அழகிகள், ஒருகாலத்திலே பாரிஸ் பட்டணத்திலே பால் பழம் விற்றுக் கொண்டிருந்தவர்கள் என்று எனனக் கதைகளை எவ்வளவு கூறினர். அதுபோலவே, வெள்ளையரின் தாளில் வீழ்ந்து கிடக்கும் தாசானுதாசர்கள், இந்த முதலாளிகள், இவர்களுக்கு நாட்டைப் பற்றிய கவலையே கிடையாது, இலாப வேட்டையே இவர்களின் இலட்சியம், இந்தப்பணம்தேடிகள், பாங்கியின் பாதந்தாங்கிகள், ஆகவே மக்களின் பரம வைரிகள், தேசத்துரோகிகள், என்று கனல்கக்கிகள் பேசின காலத்தை மக்கள் அடியோடு மறந்துவிட முடியுமா? பிரிட்டிஷ் ஆட்சி இருப்பதால் மட்டுமே இந்தச் சுறண்டல் கூட்டம் இருக்கிறது, மூலம் அழிந்தால் இந்தக்கும்பலும் ஒழியும், மக்களின் வாழ்வும் துலங்கும்என்று எவ்வளவு காரசாரமாக, காரண காரிய விளக்கத்தோடு, கதைகள் உபமானங்களோடு, கவிதை நயத்தோடு, பேசினர்! அப்படிப் பேசினவர்களின் முன்னால் அமர்ந்து கொண்டுதான், டாட்டா இல்லாவிட்டால் நாடு எப்படி முன்னேறியிருக்க முடியும், என்று அச்சமின்றிக் கேட்கிறார், சீவத்சவா, அவர் பேச்சை, மறுத்துரைக்க, சமதர்ம வீராதி வீரர்கள் கூட மறந்துவிட்டனர்—ஒரு சமயம் மருண்டுவிட்டனரோ!!

டாட்டாவும் முன்னேற்றமும்!!— நாடு முன்னேறிற்று, டாட்டாவால்!

நாங்கள் உங்கள் நாட்டைப் பிடித்து ஆள முன்வந்திராவிட்டால், [illegible]

டார் உண்டா? கார்டு உண்டா, கவர் உண்டா? தந்தி உண்டா தண்டவாளம் உண்டா? போர்டு உண்டா? கமிட்டி உண்டா? இன்ஜக்ஷன் உண்டா இஞ்சுகுலேஷன் உண்டா? ரேடியோ உண்டா? கப்பல் உண்டா? காட்டு ராஜாக்களும் அவர்களைச் சூழக்கட்டமுகிகளும், சதிபுரிவோரும் நீதியைச் சூறையிடுவோரும், உங்களுக்கு இந்த வாழ்க்கை வசதிகளைத் தந்தனரா! அவர்கள் அறிந்தாவது இருந்தனரா? அவர்கள் யாரும் தராத வாழ்க்கை வசதிகளைத் தந்தவர் யார்? வெள்ளையராம் நாங்களன்றோ! நாங்கள் இங்கு வந்திராவிட்டால், நீங்கள் என்ன நிலையில் இருந்திருப்பீர்கள்—என்று சர்ச்சிலும் அவனது சகாக்களும் பேசினபோது, நாடு கொதித்தது—ஏடுகளில் தீப்பொறி எழுத்துக்கள் நிரம்பின—மேடைகள் அதிர்ந்தன—தலைவர்கள் முழக்கமிட்டனர் — ஆனால் இதோ, அதே 'பாணியில்'—சீவத்சவா பேசுகிறார், நாடு, மௌனம் சாதிக்கிறது!! ஏன்?—

பிரிட்டிஷ் ஆட்சியினால் ஏற்பட்ட கண் கண்ட பலன்களைக்கூற பிரிட்டிஷாரே இன்று கூச்சப்பட்டுக் கொண்டு, நன்மை பல செய்தோம் என்று எவ்வளவுதான் சொன்னாலும் ஒரு நாட்டை அடிமையாக்கிக் கொண்டோம் என்ற ஒரு தீமையின் முன்பு, அந்த நன்மைகள் யாவும் பயனற்றனவாக உயிரற்றனவாக ஒளியற்றனவாகப் போய்விடுகின்றன, என்று எண்ணி, வாய்மூடிக் கிடக்க, பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தின் அடிவருடிகளில் முதலாளாகி முதலாளியான டாட்டாவின், புகழை, வெட்கமின்றி எடுத்துக் கூறுகிறார், கேட்பார் இல்லை, என்ற தைரியத்தில். டாட்டாவால், நாடு முன்னேற்றமடைந்ததாம்!! ஆகவே டாட்டாக்களை மறக்கக் கூடாதாம், கண்டிக்கலாகாதாம்! முதலாளித்வ முறையினாலே, எவ்வளவோ நன்மைகள் விளைந்தனவாம்!

டாட்டாவின் தொழில், நாட்டை முன்னேற்றிய கதை கிடக்கட்டும், நாட்டு மக்கள் கண் மூடிக் கிடந்ததால், நாட்டு ஆட்சி டாட்டாவுக்கு ஆதரவாக இருந்ததால், டாட்டா, அடைந்துள்ள முன்னேற்றம், என்ன என்பதைக் கவனிப்போம்.

டாட்டா குடும்பம், தொழிலைத் துவக்கும்போது, போடப்பட்ட மூலதனம், இருபத்து ஓராயிரம் ரூபாய்! இப்போது டாட்டா தொழிற்சாலைகளிலே போடப்பட்டுள்ள மூலதனம் 82 கோடி ரூபாய்!!

இருபத்து ஓராயிரம் ரூபாய்—முதல்—விதை! எண்பத்துஇரண்டு கோடி ரூபாய் — இப்போதுள்ள முதல்—அதாவது அறுவடையில் ஒரு பகுதி. முழு அறுவடை எவ்வளவு இருக்கும் என்பதை யூகித்துக் கொள்ளுங்கள்!

இந்த முன்னேற்றத்தை, மறைக்கவும், மேலும் மேலும் இத்தகைய முன்னேற்றத்தைப் பெறவும், இதனைப் பெறுவதை, உரிமையாக்கிக் கொள்ளவும் டாட்டா, சீவத்சவாக்களை தன் பிரசாரகர்களாக அமர்த்திக் கொள்கிறது. சர்க்கார் சாமரம் வீச, கவர்னர்கள் கைலாகு கொடுக்க, வைசிராய்கள் விருந்தளிக்க, மன்னர்கள் மண்டியிட, நிபுணர்கள் நிகண்டு தூக்க, வெளிநாட்டு முதலாளிகள் சம்பந்திகளாகிப் பூரிக்க, இவ்வித கோலாகலத்துடன் வீற்றிருக்கும் டாட்டா எவ்வளவு முன்னேற்றம் அடைந்திருக்கிறது! அதை மறைக்க, மேதாவி சீவத்சவா, நாடு, டாட்டாக்களால் முன்னேறிவிட்டது என்று கதை பேசுகிறார்!

இந்திய மூலதனம்—இந்தியத் தொழில்—இந்தியக் கம்பெனி!—என்ற பிரசாரம் டாட்டாவின் முன்னேற்றத்துக்கு 'ஜீவசக்தி'. வெள்ளையர் ஆட்சிமீது மக்களுக்கு வெறுப்பு வளர்ந்த நேரம்—வெள்ளையர், பலப்பல பொருள்களை இந்தியாவில் இறக்குமதி செய்து கொள்ளை விலைக்கு விற்றுக் கொழுத்த இலாபமடிக்கிறார்கள் என்று கூறப்பட்டது—அதன் உண்மையும் மக்களுக்கு விளங்கிற்று — இரும்பு முதற்கொண்டு, நமது நாட்டுக் கரும்பு விருந்து செய்யப்படும் இனிப்புப் பொருள் வரையிலே, இங்கிலாந்திலிருந்து இங்கு இறக்குமதியாகிறது—இதனால் இங்கிருந்து ஏராளமான தங்கம், இனி இங்குத் தங்கோம் என்று கூறிவிட்டுச் சீமை செல்கிறது, என்று மேடைகளிலே பேசப்பேச, மக்கள், "ஆமாம்! வெள்ளையர் கொள்ளை அடிக்கத்தான் செய்கிறார்கள்" என்று கூறியதுடன், இதைத் தடுக்க என்ன வழி என்று கேட்கத் தொடங்கினர். நம் நாட்டுப் பொருளை உபயோகிக்க வேண்டும். தாய்ப்பாலை நாய்க்குக்கொடுத்து விட்டு, சேய்க்கு புட்டிப் பாலைத் தருபவன், புத்தியற்றவனன்றோ!—என்று தேசபக்தர் பேசினார். சுதேசி இயக்கம் தோன்றிற்று—இந்திய மூலதனம் — இந்தியத் தொழில்—என்ற முகமூடியைத் தரித்துக் கொண்டு கிளம்பினர் — அதிலே முன்னணி வீரர் டாட்டா! இருபத்தோராயிரத்தில் துவக்கி, எண்பத்து இரண்டு கோடிக்கு வளர்ந்து நிற்பவர் — சீவத்சவா போன்ற பல வக்கீல்களை வேலைக்கு அமர்த்திக் கொண்டுள்ளவர்.

இலாபக் குறிப்பைச் சந்தோஷத்தோடு காட்டுவதுடன், டாட்டாவால், பெருமையுடன், சிறிதளவு கர்வத்துடனும் கூட, வேறோர் குறிப்பைக் காட்டமுடியும்—காட்டி வருகிறார்!

ஆட்சி எவ்விதமானதாக இருப்பினும் சரி, சீமைத் துரைமார்களின் ஆட்சியானாலும் சரி, தேசபக்தசீலர்களின் ஆட்சியானாலும் சரி, அந்தச் சர்க்காரிலே, டாட்டா சரக்கு நிச்சயம் இருந்து தீரும்.

லின்லித்கோ காங்கிரசிடம் போருக்கு நின்றார். தலைவர்களைச் சிறையிலிட்டார். நாடே, லின்லித்கோவைக் கண்டித்தது. அவ்வளவு கண்டனத்துக்கு ஆளான லின்லித்கோவின் ஆட்சியாளர் குழுவில், ஒரு டாட்டாசரக்கு, இருக்கத்தான் செய்தது— சர். மோடி வைசிராய் நிர்வாக சபையிலே வீற்றிருந்தார்!

லின்லித்கோ போனார், வேவல் வந்தார்—அதே ஏகாதிபத்ய முறைப்படி—மோடி போனார், ஆர்தேஷர் தலால் வந்தார், வைசிராய் நிர்வாக சபைக்கு! தலால் யார்? டாட்டா சரக்குத்தான்!!

வேவலும் சென்றார், மவுண்ட்பேடன் வீற்றிருக்கிறார், நேருவின் பேரப்பிள்ளையைத் தூக்கி வைத்துக் கொண்டு கொஞ்சி விளையாடும் அளவுக்கு தேசீயத்துடன் நேசம் கொண்ட நிலையில், ஆனால், டாட்டா சரக்கு இல்லையோ, என்றால், இதோ நான் இருக்கிறேன், என்று கூறுகிறார், ஜான்மத்தாய்.

லின்லித்கோ, வேவல், மவுண்ட்பேடன்—புயல், வாடை, தென்றல் என்று அடைமொழி தருவதானாலும் சரி, காரம், புளிப்பு, இனிப்பு, என்று அடைமொழிதருவதானாலும் சரி; இந்த மூன்று நிலையிலும்,

டாட்டா சரக்குமட்டும் உண்டு!! இவ்விதமான ஆதிக்கம் ஏற்பட்டிருப்பதை அறிந்திருப்பதால் தான், சிவத்சவா, அவ்வளவு தைரியமாகப் பாராளுமன்றத்தில் பேசினார், டாட்டா இல்லாவிட்டால் நாடுஉருப்பட்டிருக்குமோ, என்று! கேட்டுக் கொண்டுதான் இருந்தார் நேரு!

ஏதோ பேசினார், வெட்டியாக, இதை ஏன் கண்டிக்கவேண்டும்,காரியத்தைக் கவனிப்போம் என்று நேரு இருந்துவிட்டார், இதிலென்னதவறு என்று கேட்கத்தோன்றும் அன்பர்களுக்கு. அதுபோலக் காரியத்தையாவது கவனித்துக்கொண்டாலும், களிப்படையலாம் ஆனால் நடந்தது என்ன? முதலாளிகளின் போர் தொடுக்கப்பட்ட நாட்களிலிருந்து, என்ன நடைபெறக்கூடும்என்று நாம் எதிர்பார்த்து எழுதிக்கொண்டு வந்தோமோ, அதுதான்நடைபெற்றது. சிவத்சவா பேசிய அன்று—காரியத்திலும், வெற்றி நேருவின் இலட்சியத்துக்கு அல்ல, நாட்டு இளைஞர்களின் இன்பக்கனவுக்கல்ல, டாட்டாக்களுக்கே வெற்றி. சர்க்காரின் தொழில் கொள்கையை விளக்கிவிட்டார் நேரு — ஏழையின் இன்பக் கோட்டையை உடைத்துவிட்டார், இலட்சியவாதிகளின் எண்ணத்தைத் தகர்த்துவிட்டார் — சமதர்மத் திட்டத்தைக் கேலிக்கிடமானதாக்கிவிட்டார். சர்க்கார், தனிப்பட்ட முதலாளிகளின் பாதையைத்தடுக்காது என்று வாக்களித்துவிட்டார்!!

முதலாளிகள், பயமின்றி கவலையின்றி, இலாபம் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன், ஏராளமான முதலைத்தாராளமாகப்போட்டு,தொழிலை வளர்ச்சி அடையச் செய்து, உற்பத்தியைப்பெருக்கவேண்டும் என்று வினயமாக வேண்டிக்கொண்டார்—யார்—பெய்பூர் காங்கிரசிலே மாஸ்கோமீது ஆணையிட்டுப் பேசிய அதே நேருதான்! ஏன்? சிவத்சவாக்கள், இந்த 'ரசவாதத்தை' வெற்றிகரமாகச் செய்துவிட்டனர். சமதர்மத்தை வெறும் ஏட்டுச்சுரை என்று நேரு போன்றவர்களே கூறும் நிலையை ஏற்படச்செய்துவிட்டனர்.

பேராசிரியர் K. T. ஷா வகுப்புவாதியல்ல — காங்கிரசுக்கு எதிர்க்கட்சி அல்ல — ஏடறியாதாருமல்ல. அவரே அன்று, ஆயாசத்துடன் பேசினார்.

"கட்சிக் கொறடாவின் நிர்ப்பந்தம் இல்லாமல், மெம்பர்கள், மனச்சாட்சியின்படி ஓட் அளிக்கலாம், என்று இருந்தால் சர்க்காரின் இந்தத்தீர்மானம் தோற்றுவிட்டிருக்கும்" — என்று பேராசிரியர் ஷா, கூறுகிறார். மனச்சாட்சியின்படி, நடந்துகொள்ளவில்லை மெம்பர்கள்! கட்சிக்கட்டுப்பாடு, மனச்சாட்சியை மாய்த்துவிடுகிறது!! இது, மாசு நீக்கிய மணிகள் அரசமன்றத்திலேவீற்றிருக்கும் இலட்சணத்துக்கு அறிகுறி! நாம் வெட்கப்படுகிறோம், இந்த நிலை, நமது நாட்களிலே இருக்கக் கண்டு! தூபதீபத்தோடு பீடத்தில் ஏற்றப்பட்ட தூயவர்கள்நாட்களிலே, மனசாட்சிக்கு மரணச்சீட்டு தரப்படுவது கண்டு, துக்கப்படுகிறோம். இந்நிலை அறிந்து, அறிவித்து, பிறகும், அங்குவீற்றிருப்பதுஆண்மையுமல்ல, அறிவுடைமையுமல்ல, என்று உணராமலிருக்கும் பேராசிரியரின் நிலை கண்டு பெரிதும்இரங்குகிறோம். சர்க்கார் கொண்டுவந்த தீர்மானம், முதலாளிகளின் அச்சத்தைப் போக்குவதை நோக்கமாகக் கொண்டது. பேராசிரியர் ஷா, பொருளாதாரப் புலவர். அவருடைய மனச் சாட்சி, சர்க்காரின் அந்தத் தீர்மானத்தைக் கண்டிக்கச் சொல்கிறது. கட்சிக் கொறடாவோ, தீர்மானத்தை ஆதரிக்கச் சொல்கிறார். பேராசிரியர் ஒருகுரல் அழுதே விட்டார் இந்நிலையை விளக்குகையில்.

முன்னேற்றமடைய விரும்பும் அரசு, நாட்டு வளத்தை விருத்தி செய்யும் நோக்கமுடைய அரசு, அனுஷ்டிக்க வேண்டிய கொள்கை இது அல்ல"—என்று பேராசிரியர் பேசினார்.

"ரோடு, ரயில், கடல்மார்க்கம், விமானமார்க்கம், போன்ற துறைகளைக் கூட, சர்க்கார் தனது தொழிலாகக் கொள்ளும் என்று தீர்மானம் தெரிவிக்கவில்லையே, எல்லாவற்றையும் தனிப்பட்ட முதலாளிகளிடமல்லவா சர்க்கார் விட்டுவிடுகிறது, இலாபம், இலாபம், இலாபம் என்று கூவுபவர்களிடம் அல்லவா விட்டுவிடுகிறது!" என்று கூறுகிறார் பேராசிரியார் ஷா.

நாடு முன்னேறாது! நாட்டுவளம் வளராது! முதலாளித்வம் செழிக்கும்! அவர்களின் இலாபம் கொழுக்கும்!

இது, 'மாஸ்கோ கூலி' என்று கூறி ஒதுக்கிவிடக்கூடியவரின் தீர்ப்பல்ல, மதிவாணரின் பேச்சு—மனம் நொந்து பேசியிருக்கிறார், பாராளும் மன்றத்தில். பேசி என்ன பலன் கண்டார்? நேரு, முதலாளிகளுக்குத் தைரியமூட்டும், கண்றாவிக் காட்சியைத்தான் கண்டார்!!

இலட்சியவாதிகளே, நேரு, கேலி செய்யவே துணிந்துவிட்டார். ஆயிரமாயிரம் மேடைகளிலே அவரே கூறினார், இந்நாட்டு பொருளாதார முறைகள் மகா மோசமானவை. இவைகளை அடியோடு ஒழித்தாக வேண்டும்" என்று. இப்போது, கழைக் கூத்தாடி போலாகி விட்டார்! ஒரே அடியாக இந்த முறைகளை ஒழித்துவிட முடியாதாம்! கூடாதாம்! தேவையில்லையாம்! படிப்படியாக, பக்குவமாகச் செய்ய வேணுமோம்! சிங்கம் இப்படிச் சிந்து பாடும்போது, சிறுநரி என்ன செய்யும்!! சிவத்சவா, ஒருபடி முன்னேறிச் சென்று, டாட்டாவின் புகழ் பாடுகிறார்!

* * *

"சுதந்திர இந்தியாவுக்கு வயது ஏற ஏற, அதன் தியாக மக்களாகிய ஏழைப் பாட்டாளிகளின் கஷ்டமும் எவ்வித எதிர்ப்பும் இல்லாமல் வேக வேகமாய் முன்னேறுகிறது.

வெள்ளைக்கார ராஜாங்கமாக இருந்தால் இதைப்பற்றிச் சொல்லியாவது பார்க்கலாம். நியாயம் கிடைக்காவிட்டால் வம்பு தும்பாவது செய்து பார்க்கலாம்.

இப்போது அதுவும் முடியவில்லை. ஏனென்றால் சொந்த ராஜாங்கம் வந்த புதிதில் 'அது வேணும், இது வேணும்' என்று வம்பு பண்ணுவது தப்பு.

சரி, நிஜம், சொந்த அரசாங்கத்திற்கு அதிக தொந்தரவைக் கொடுக்கக் கூடாதென்று, கஷ்டத்தைப் பல்லைக்கடித்துக் கொண்டு சகித்திருந்தால், சொந்தப் பங்காளாகிய முதலாளிகள், தலை, கால் தெரியாமல் கொம்மாளம் கொட்டி, கஷ்டப்படுகிறவன் கஷ்டத்தைப் பெருக்க வைக்கிறார்கள்.

இதையும் முடிந்தமட்டும் சகித்து முடியாத போது ஏதேனும் கோரிக்கை அனுப்பி, வேலை நிறுத்தம் செய்தால், அதற்கும் அரசாங்கத்தின் உதவி கிடையாது. உதவிக்குப் பதில் ஏழைகளுக்கு உபதேசம், முதலாளிகளுக்கு ஆதரவு.

உபதேசத்தைச் சாப்பிட்டு எத்தனை நாட்களைத்தான் ஏழைத் தொழிலாளி வயிற்றை வற்றப் போவான் என்பதை அரசாங்கம் புரிந்துகொள்ளவேயில்லை. முதலாளிகளின் அநீதம், அரசாங்க மாளிகையில் எப்படியோ நியாயமாக மாறி, பாட்டாளியின் கோரிக்கையை அநியாயமாக ஆக்கிவிடுகிறது. அரசாங்கத்தின் முன்னே வயிறு காய்கிற ஏழை, குற்றவாளியென்றாகி, தேசவிரோதியென்ற கெட்ட பட்டத்தையும் கட்டிக்கொள்ள நேருகிறது.

ஒருசில நூறு அல்லது ஆயிரம் முதலாளிகளைத் திருப்தி செய்வதற்காக, பல கோடி பாட்டாளிகளை வஞ்சிப்பது மகா பாதகம்! பலகோடி மக்களுக்காக சில

(A பக்கம் பார்க்க)

# திராவிட நாடு

காஞ்சி] 18—4—48 [ஞாயிறு


# வெள்ளி முளைக்க 8 ஆண்டுகள்!

## 'வகுப்புவாதம்'— சோகத்தொடர்கதை

✻

மேடையில் பேசும் போது, எல்லோரும் சரியாகத்தான் பேசுகிறார்கள். ஆனால் தனியே சந்தித்துப் பேசுகையில் வகுப்புவாதம் அவர்களைப் பிடித்துக் கொள்கிறது.

இந்த நிலைமை நீடிக்குமானால், இந்தியா முன்னேற முடியாது.

*என்று முதலமைச்சர் ஓமந்தூரார், சென்னையில் சென்ற கிழமை பேசியிருக்கிறார்.*

வெளுத்ததெல்லாம் பால், கருத்ததெல்லாம் நீர் என்று நம்புபவர், ஓமந்தூரார் என்று கூறுகிறார்கள் அப்படிப்பட்டவர், 'ராஜதந்திரத்துக்காக' இதுபோல் பேசியிருக்க முடியாது. உண்மையாகவே, உள்ளத்திலிருந்தே, இந்தக்கருத்துவெளி வந்திருக்கவேண்டும். வெறும் உதட்டசைவாக இருக்கமுடியாது.

முதலமைச்சரின் இந்தப் பேச்சிலே, சலிப்பும் திகைப்பும் தோய்ந்திருக்கிறது. வகுப்புவாதம் கூடாது என்பது முதலமைச்சரின் ஆவல். அந்த ஆவலின் காரணமாக அவர், வகுப்புவாதம் எங்காவது தலைகாட்டுகிறதா என்று தேடிப் பார்க்கிறார்— யார் வகுப்புவாதம் பேசுகிறார்கள் என்று பார்க்கிறார், மேடைஏறிப் பேசுபவர்களைக் கவனிக்கிறார், அவர்கள் யாரும், வகுப்புவாதம் பேசுவதில்லை—ஆனால், தனிப்பட்ட முறையில் சந்திக்கும்போது, வகுப்புவாதம் அவர் எதிரே தெரிகிறது— எப்படிவந்தது—அவர் திகைக்கிறார்!

மேடைஏறி, இந்தியர், பாரதபுத்ரர், என்று பேசிய சிலர், முதலமைச்சர் முன்போ, அல்லது அவர் கவனிக்கிறார் என்பதறியாமல், வேறு யாரிடமோ, 'வகுப்புவாதியாக'ப் பேசியிருக்க வேண்டும்— அதனாலேதான் சலிப்பும் திகைப்பும் தோய்ந்த குரலில், முதலமைச்சர் கூறுகிறார், மேடை ஏறிப்பேசும் போது சரியாகத்தான் பேசுகிறார்கள். தனிப்பட்ட முறையிலேயோ வகுப்புவாதம் பேசுகிறார்கள் என்று.

"வாங்க! சௌக்யந்தானே! கதர் விற்பனை எப்படி? அரிஜன சங்கம் சரியாக வேலை செய்கிறதா?" — என்று முதலமைச்சர், ஏதோ ஓர் ஊரிலிருந்து வந்த, காங்கிரஸ் தோழரை விசாரிக்கிறார். அவர், "சௌக்யந்தான்! கதர் விற்பனை பரவாயில்லை!" என்று பதில்கூறி விட்டு, "இது கிடக்கட்டும், ஏன் இப்படி ஒரே பார்ப்பனராஜ்யமாகி வருகிறது—" என்று ஒரு வெடிகுண்டு வீசுகிறார், முதலமைச்சர் அருவருப்படைந்து, "என்னசொல்கிறீர்?" என்று கேட்க, குறைகூறியவர், "எங்கள் ஊரிலே, கலெக்டர் பார்ப்பனர், டிப்டியாவது ஒருதமிழனாக இருக்கவேண்டுமென்று நான் கிளிப்பிள்ளைக்குச் சொல்வது போலச் சொன்னேன்— சட்டையே செய்யாமல், டிப்டியும் ஒரு ஐயராகவே கொண்டுவந்து போட்டீர்கள். இது என்ன நியாயம்! இப்படி, பெரிய உத்யோகஸ்தரெல்லாம், ஐயர்மார்களாக இருந்தால், நாங்கள் என்ன செய்வது" என்று கூறுகிறார். முதலமைச்சர் திகைக்கிறார். "அடடா, எப்படிப்பட்ட தேசபக்தர் இவர். அலிபுரம் சிறையிலே ஆறு வருஷம் இருந்தார்—அப்பழுக்கற்ற தியாகி. இப்படிப்பட்டவர், வகுப்புவாதம் பேசுகிறாரே, என்னென்பது இந்தப் போக்கை! இவரே சென்ற மாதம், வகுப்புவாதம் ஒரு கொடிய நோய் என்று பேசினார், என்று பத்திரிகையில் படித்தேனே — என் எதிரே இப்போது வகுப்புவாதம் பேசுகிறாரே!" என்று எண்ணித் திகைக்கிறார்.

இவ்விதமான பல சம்பவங்களைக் கண்ட அனுபவத்தால் மட்டுமே, முதலமைச்சர், திகைத்துப் போய், அன்று சென்னையில் அவ்விதம் பேசியிருக்க வேண்டும். அவருடைய அனுபவம், காங்கிரஸ் வட்டாரத்திலே பெற்றதாகத்தானே இருக்க முடியும் — நமது பக்கம்கூட அவர் தலைவைத்துப்படுத்தறியாதவராயிற்றே! அனுபவபூர்வமாக ஓர் உண்மையை முதலமைச்சர் கண்டறிந்திருக்கிறார்; வகுப்புவாதம், மேடையில் தெரிவதில்லை, தனிப்பட்ட சந்திப்புகளின்போது, அதன் தாண்டவம் இருக்கிறது. அவர் திகைக்கிறார். மேடையிலே, வகுப்புவாதம் பேசுபவர் இல்லை—செயலிலும், தனியான பேச்சுகளிலும், வகுப்புவாதம் வேலைசெய்கிறது, என்று அனுபவ பூர்வமாகக் கண்டறிந்து, திகைத்து, அந்த வகுப்புவாதம், இந்தியாவையே நாசமாக்கிவிடும் என்று கூறிக் கவலைப்பட்டு, வகுப்புவாதத்தை விட்டொழிக்கும்படி, அன்புரை வழங்குகிறார், ஆனால் முதலமைச்சர் ஓமந்தூராரே, இன்று ஓர் வகுப்புவாதியாகக் காணப்படுகிறார், பல காங்கிரஸ் தலைவர்களின் கண்களுக்கு!!

வகுப்புவாதம் கூடாது என்றுதான் அவர் பேசுகிறார், ஆனால் அவரை வகுப்புவாதி என்று தான், அவர்வாழும் காங்கிரஸ் வட்டாரத்திலேயே சிலர் கூறுகிறார்கள். பாரததேவி சித்திரநடையிலேயே எழுதிற்று, விபூதிபூசும் ராமசாமிப்பெரியார் இவர்! என்று. சுதந்திரானும் ஆங்கில வார இதழில், ஓமந்தூரார் ஓர் வகுப்புவாதி என்று பொதுவாகக் கூறியதோடு விடவில்லை, அவர்ஓர் 'பிராமணத்துவேஷி' என்று எழுதியதுடன் திருப்தி அடையவில்லை, அவருடைய தலைமையில் நடைபெறும் மந்திரிசபையே பிராமணத் துவேஷசபை!! என்று சென்ற இதழில் கூட எழுதி இருக்கிறது.

வகுப்பு வாதத்தை விரட்டப்போய், வகுப்புவாதி என்ற தூற்றலைப் பெற்றுக்கொண்டிருக்கிறார் முதலமைச்சர். இதுகண்டு, அவர் மேலும் திகைப்படையக் கூடும். திகைப்புகூடாது, தெளிவுபெறச் சற்றுத்தீர யோசிக்கவேண்டும். வகுப்பு வாதம் என்றால் என்ன? ஏன், அது மாபெரும் குற்றமாகக் கூறப்படுகிறது? யாரால் கூறப்படுகிறது? எந்தெந்தச் சமயத்தில் கூறப்படுகிறது? என்ன நோக்கத்துடன் கூறப்படுகிறது?—இவைகளைப்பற்றி முதலமைச்சரும் அவர் வழி சிந்திக்கும் அன்பர்களும் யோசிக்க வேண்டும்—அப்போது, வகுப்புவாதத்தின் பிறப்பு வளர்ப்பு விளங்கும்—உண்மைக் குற்றவாளிகள் தெரிவர்.

மேடையை மட்டும் கவனித்தால் வகுப்பு வாதம் தெரியக் காணோம் என்கிறார் முதலமைச்சர். அது முழு உண்மையல்ல!

பிரிட்டிஷார், இவ்வளவு பெரிய நாட்டை எப்படி அடக்கி ஆள முடிந்தது?

நாம் நாற்பதுகோடி மக்கள்—ஆனால் நாலாயிரம் ஜாதிகளாகப் பிரிந்து, பிளவுபட்டுப் பாழானோம். உன் ஜாதி பெரிது, என் ஜாதி உயர்ந்தது, நீ மட்டம், நீ தாழ்ந்த ஜாதி என்று நமக்குள் சண்டையிட்டு நாசமானோம். இதனைச் சாதகமாக்கிக் கொண்டான் அன்னியன். பாழான ஜாதி பேதம், இந்த நாட்டிலே இருக்கும்வரையில், நாடு உருப்படாது.

வீணான ஜாதிபேதத்தாலேதான், நம் நாடு, வெள்ளைக்காரனிடம் இவ்வளவு காலம் அடிமைப்பட்டுக் கிடந்தது.

தமிழர்கள், ஜாதிபேதத்தை அடியோடு விட்டொழிக்க வேண்டும்.

ஒன்றே குலமும் — ஒருவனே தேவனும்.

ஜாதி இரண்டொழிய வேறில்லை.

நாமெல்லாம் இந்தியர்—தமிழர். நமக்குள் ஒற்றுமை வேண்டும். வகுப்புவாதம் கூடாது.

* * *

அவாளவாளுக்கு ஒரு ஜாதின்னு ஏற்பட்டிருக்கு. அது சரியோ, தப்போ, நம்மாலே ஆகிற காரியமல்ல அது. மேலும், இன்று நேற்று ஏற்பட்ட விஷயமுமல்ல. ஞானஸ்தாள், ஆதிகாட்களிலே, தீர்க்காலோசனைக்குப் பிறகு, சாஸ்திரோக்தமாகச் செய்த ஏற்பாடு. வர்ணாஸ்ரமம், சனாதனம் என்று அந்தக் காலத்திலே பெரியவர்கள் ஏற்பாடு செய்தான்னா, அது அர்த்தமற்றதாகவோ, கேவலமானதாகவோ இருக்க முடியாது. மகரிஷிகள் காலத்திலே ஏற்பட்ட முறை. இப்போது காலம் மாறிண்டு போறதாலே, ஒரு சமயம், அந்த ஏற்பாடு, தப்புண்ணு கூடத் தோன்றலாம். தப்போ சரியோ, அது நம்ம பூர்வீகச் சொத்து, அதை நம்புகிறவா நம்பட்டும், வேண்டாம்னு சொல்றவா சொல்லட்டும், ஆனா நான் என்ன சொல்றேன்னா, ஜாதி பேதத்தைப் பிரமாதப்படுத்திண்டு, சதா சர்வகாலமும் அதையே பேசிண்டு, ஒரு ஜாதியாரைப் பழிச்சிண்டு, வகுப்புவாதம் பேசிண்டுஇருக்கிறது, கூடாதுன்னுதான் சொல்றேன். அது நம்ம தேசத்துக்கே பெரிய நாசமான காரியமாகும். அவாளவாளுக்கு அவாளவா ஜாதி உசத்தி தான்! இதிலே சண்டை எதற்கு, சச்சரவு எதற்கு? எல்லோரும் சகோதராளாகப் பாவிச்சிண்டு, வாழ்ந்தா தான் க்ஷேமம்.

* * *

கூர்ந்து கவனித்தால், மேடைப் பேச்சிலேயே, இந்த இருவிதக் 'குரல்' கிளம்பக் காணலாம். முன்னது, உறுதியுடன் உள்ள குரல்—தீமையைத் தீய்த்தாக வேண்டும் என்ற தீர்மானமான குரல்! மற்றது, தட்டுத் தடுமாறி, மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல், ஏனோ தானோ வென்றுள்ள குரல்! இந்த இருவிதங்களும், காங்கிரஸ் மேடையில் உண்டு — நெடுநாட்களாகவும் — இன்றும், இந்த இருவகைப் பேச்சில், பின்னதற்கே, பத்திரிகைகளில் தாராளமாக இடம் கிடைக்கும்! எனவே, மேடைப் பேச்சு மூலம், அதிகமாகப் பரவிய கருத்து, இரண்டாவதாக உள்ள, 'இரண்டுங் கெட்டான்' கருத்துத் தான்!!

**திராவிடர் கழக**
**மாகாண மாநாடு**
**தூத்துக்குடியில்**
**மே, 1, 2, தேதிகளில்**
**நடைபெற**
**ஏற்பாடாகிவருகிறது.**

இப்போதும், முதலமைச்சர், பரீட்சை பார்க்கலாம். அவர்வகுப்பு வாதம் பேசவேண்டாம். ஜாதிக் கொடுமைகள் ஒழிய வேண்டும் என்றுபேசி, நாட்டிலே என்னென்ன வகையான கொடுமைகள் ஜாதியின் பேரால் நடைபெறுகின்றன, என்று விளக்கட்டும் — எத்தனை இதழ்கள் இருட்டடிப்புச் செய்கின்றன, என்பதை அனுபவ பூர்வமாகக் கண்டு கொள்ளலாம்.

வகுப்புவாதி! மிக மிகச் சாமர்த்தியமாக, பொது மக்கள் முன்னிலையில் நடமாட விடப்பட்ட சொல்! தன்னலக்காரரின் அகராதியில் முளைத்தது இச்சொல்! தமிழகத்திலே, சமூக நீதிக்காகப் பாடுபட, என்றையத்தினம் சிலர், கிளம்பினார்களோ, அன்றுமுதல் உலவிவரும் சொல்!! என்றையத் தினம், ஆதிக்கக்காரரைப் பார்த்து, விழிப்பு நிலை பெற்ற அடிமைகள், இது என்னய்யா அநீதி என்று கேட்கத் தொடங்கினார்களோ, என்றையத்தினம் முதற்கொண்டு, நீதிக்காக வாதாடவும், பிறகு, போராடவும் சிலர் முன்வந்தார்களோ, அன்று முதல், இந்தச் சொல் கிளம்பிற்று. தூய்மையான மனமுள்ளவர்களை, இச்சொல், துடிதுடிக்கச் செய்திருக்கிறது! பலருடைய அரசியல் வாழ்வை, வாட்டி வதைத்திருக்கிறது — இன்றும் வதைக்கிறது. விழிப்புணர்ச்சியுடன் காணப்பட்டால், விவேகியாகத் தெரிந்தால், வீரனாகக் காட்சி தந்தால் போதும், இந்தச் சொல் கிளம்பும், அவரை வதைக்க. அரசியல் வரலாற்றை, இந்தச் சொல் பாதித்ததைப் போல, டயரின் குண்டுகள் கூடப் பாதிக்கவில்லை. இதனால் மனம் உடைந்தவர்கள், வாழ்க்கை நொறுங்கியவர்கள் எவ்வளவு பேர்! சந்தேகமும் கண்டனமும், சொல்லடியும் கல்லடியும், எவ்வளவு பேருக்கு, இந்தச் சொல் வாங்கித் தந்தது! இந்தச் சொல்லின் சரிதமே, ஓர் சோகத் தொடர்கதை! தியாகராயரில் தொடங்கி இன்று ஓமாந்தூரார் வரையிலே, உள்ள தொடர்கதை! ஓமந்தூரார் மந்திரி சபையை, இன்று வகுப்புவாத மந்திரி சபை, பழைய ஜஸ்டிஸ் கட்சி வாடை வீசும் மந்திரி சபை என்றெல்லாம், காங்கிரஸ் கட்சியினரே, கூறுகின்றனர்.

ஓமந்தூராரைச் சில காங்கிரஸ்காரர்கள் வகுப்புவாதி என்று கூறுகின்றனர்.

ஓமந்தூரார் மந்திரி சபையை ஆதரிப்பவர்கள், மந்திரி சபையைக் குறை கூறுபவர்களை, வகுப்புவாதிகள் என்று கண்டிக்கின்றனர்.

ஒருபிரிவினர், மற்றப்பிரிவினரின் கண்களுக்கு, வகுப்பு வாதிகளாகத் தெரிகின்றனர்.

ஓமந்தூரார், உள்ளம் நோகிறது! வகுப்பு வாதத்தை ஒழிக்க அரும்பாடு படும் நம்மை வகுப்புவாதி என்று, வகுப்புவாதச் செயல்புரிபவர், குறை கூறுகிறார்களே! இது என்ன காலக்கேடு!-என்று எண்ணி வருந்துகிறார்.

அதுபோலவே, காங்கிரஸ் கட்சியிலே ஒருசாரார், "பேசுவது தேசியம், காரியமோ அசல் வகுப்பு

வாதம் — இந்த இலட்சணத்தில் வகுப்புவாதத்தை ஒழிக்கப் போவதாக வேறு வாய்வீச்சு! இப்படி ஒரு வகுப்புவாதியை நாங்கள் கண்டதே இல்லை"—என்று கண்டிக்கிறார்கள்.

ஆந்தை, குயிலைப்பழிக்கிறது, என்கின்றனர் ஒருசாரார்.

பூனை, போதகாசிரியர் போல வேடம் போடுகிறது என்கின்றனர் மற்றோர் சாரார்.

இப்படி, ஒரே கட்சியிலுள்ள இரு பிரிவுகளுக்குள், ஏற்பட்ட மனபேதம், வகுப்புவாதி என்ற அந்தப் பழைய சொல்லையே ஆயுதமாகக் கொண்ட, போருக்கு அடிகோலுவதாகி விட்டது. இதிலே நியாயம் எந்தப்பக்கம் இருக்கிறது என்பது அல்ல, முக்கியமான பிரச்னை, இந்த வகுப்புவாதம் என்ற சொல்லுக்குள், இதுவரை அடைத்து வைத்துள்ள குற்றச்சாட்டு, எத்தன்மையது, என்பதே முக்கியமான பிரச்னை, இதற்கு, இன்றைய அரசியல் நிலைமையை மட்டும் கவனித்தால் போதாது, வகுப்பு வாதம் என்ற சொல் பிறந்த காலத்தைக் கவனிக்க வேண்டும்.

தமிழர் நன்கு அறிவர்,—ஓயாத பிரசாரம் இதுபற்றி நடந்திருப்பதால்— வகுப்புவாதிஎன்ற சொல்லை, காங்கிரசார், பார்ப்பனரல்லாதார் கட்சி ஏற்பட்ட உடனே, சிருஷ்டித்து, ஏவினர் என்பதை.

சமுகத்திலே பல ஜாதிகள்-அவைகளுக்கிடையே உயர்வு தாழ்வுகள்—அதன் பலனாகச் சிலருக்கு ஆதிக்கம் பலருக்கு அடிமைத்தனம்-அந்த ஆதிக்கத்தின் விளைவாகச் சிலருக்குச் சுகவாழ்வு, அடிமைத்தனத்தின் பலனாகப் பலருக்கு, பாதிவாழ்வு! இப்படிப்பட்ட நிலையை மாற்றி, சமுக நீதி ஏற்படுத்தவேண்டும், என்று சிலர் எண்ணினர்! இந்த எண்ணம் கொண்டது தவறா? சமுகத்தில், மிகப் பெரும்பாலோராகப், பார்ப்பனரல்லாதாரும், சிறுபான்மையினராகப் பார்ப்பனரும் இருப்பதும், பெரும்பாலோர், அந்தச் சிறுபான்மையினரை, சாஸ்திர ஆதாரப்படியும்,பழக்கவழக்கத்தின்படியும், மேல் ஜாதியினராகக் கொண்டிருப்பதும், இந்த நிலைமையினால், பெரும்பாலோர், கல்வி, தொழில், பொருளியல், அரசியல், மதஇயல், முதலியவற்றில், உரிய அளவு இடமோ வசதியோ பெறாமல், இருந்தும், அதே துறைகளில் சிறுபான்மை வகுப்பினரான பார்ப்பனர், மிகமிக அதிகமான உயர்வு பெற்று விளங்கியதும், கருத்துள்ளோர் அனைவருக்கும் தெரிந்தது. அப்படிப்பட்டவர்களிலே, ஆண்மையாளர்கள் சிலர், இந்த அநீதி ஒழிக்கப்படவேண்டும் என்று கூறினர்—வகுப்பு நீதி கேட்டனர்-அந்த வகுப்பு நீதி கோரிக்கை, தங்கள் ஆதிக்கத்துக்கு உலைவைப்பதாகும் என்றுஎண்ணிய பார்ப்பனர், நீதிகேட்டவர்களை, வகுப்பு வாதிகள் என்றனர்—அந்தச்சொல், நிந்தனைப்பதமாகி, தக்க பிரசாரசாதனம் இருந்த காரணத்தால், வகுப்பு நீதி கோரியவர்களை, வகுப்பு வாதிகள் என்று பொதுமக்களே எண்ணி ஏசக்கூடிய ஓர் வேதனையான நிலைமையை உண்டாக்கிவிட்டது.

பிரசார பீரங்கிகள் முழங்கின! எங்கும்!! வகுப்புவாதி! வகுப்புவாதி!! கண்டனக்கணைகள் சரமாரியாகக் கிளம்பின, பலருடைய அரசியல் வாழ்வை, வதைத்தன—இருதயங்களைச் சிதைத்தன! காங்கிரஸ் மேடை ஏறினதும், சபாஷ் பட்டமும், பத்திரிகையில் இடமும் பெற வேண்டுமானல், வெகு சுலபம், வகுப்பு வாதிகளைக் குழிதோண்டிப் புதைப்போம் என்று கூறினல் போதும்! கடந்த இருபதாண்டுகளாக, தமிழ்நாட்டு அரசியலில், இந்த அணுகுண்டு உபயோகப்படுத்தப்பட்டது, நீதிகேட்டவர்களுக்கு எதிராக.

இப்போது, காங்கிரசிலேயே ஒரு பகுதி, மற்றோர் பகுதியை, வகுப்புவாதி என்று குற்றம் சாட்டுவதைக் காண்கிறோம்.

வகுப்புவாதி என்று முதன் முதல், அநியாயமாக நிந்திக்கப்பட்ட நீதிக்கட்சியினர், செய்ய விரும்பியதெல்லாம், பெரும்பான்மையினராக உள்ள பார்ப்பனரல்லாதாரை, அவர்களின் வீழ்ச்சியுற்ற, தாழ்நிலையிலிருந்து, எழிச்சியுறச் செய்து, சமஉரிமை பெறச்செய்வது என்பதுதான். இதற்குத்தான் வகுப்பு வாதம் என்று பெயரிடப்பட்டது.

"தமிழ்நாட்டில் ஒரு விஷமப் பிரசாரம், சமீபகாலத்தில் நடந்துவருகிறது. மெஜாரிட்டிவகுப்பாரைத் தூக்கிவிடுவதற்கு என்ன நடவடிக்கைஎடுத்தாலும், உடனே அதை பிராமணத்துவேஷம் என்று சொல்லுகிறார்கள்." என்று, தினசரி, ஏப்ரல் 5-ந் தேதி, தலையங்கத்தில் தீட்டுகிறது. அதாவது, வகுப்புவாதி, பார்ப்பனத்துவேஷி, என்ற ஏசல்,தினசரியின்கட்டடத்தின்மீது வீழ்ந்த பிறகு.

சமீப காலமாக விஷமப்பிரசாரம் நடைபெறுகிறது என்று தினசரி எழுதுகிறது. முழு உண்மை அல்ல! தினசரி சொக்கலிங்கனார் தினமணி ஆசிரியராக அமைவதற்கு முன்பிருந்தே நடைபெறுகிறது — கால் நூற்றாண்டாக இக்கடுமொழி வீசப்பட்டு வருகிறது, இந்தவிஷமத்தனம் நடைபெறுகிறது — நடைபெற்றுவந்திருக்கிறது என்பது மட்டுமல்ல உண்மை, நண்பர் சொக்கலிங்கமும் சேர்ந்து நடத்தி வந்தார், இந்த விஷமப்பிரசாரத்தை!! தன்தலைமீது, இதே வசைச் சொல் வீசப்படும் என்று எண்ணியிருப்பாரா, அந்த நாட்களில்!

அந்த நாட்களில்! அவருடைய அறியாப் பருவத்தில், என்று பொருளில் கொள்கிறோம், அந்த வாசகத்தை.

இன்று, அனுபவம் நிரம்பப் பெற்று, உண்மையில் வகுப்புச் சுயநலமிகள் யார் என்பதைக் கண்டறிந்து, வகுப்பு நீதிக்காகப் போராடக் கிளம்பி, வகுப்புவாதி என்று ஏசப்படுகிறாரே, அந்த ஏசல் அவருக்குக் கோபத்தை மட்டுமல்ல, சிறிதளவு வருத்தத்தையும் தந்திருக்கும். இன்று நாம் எந்தக்காரியத்தை வகுப்பு நீதிக்காகச் செய்கிறோமோ, எந்தக்காரியம் செய்வதற்காக, தூற்றப்படுகிறோமோ, இதையே, பல ஆண்டுகளுக்கு முன்பு, நீதிக்கட்சியினர் செய்தபோது, அவர்களை நாம் எவ்வளவு பதை பதைக்கத் திட்டினோம், எவ்விதமாகவெல்லாம் கண்டித்தோம் — என்பது பற்றி, அவர், எண்ணும்போது இரண்டோர் சொட்டுக் கண்ணீர் வராமலிருக்குமா! விஷமப் பிரசாரம்! ஆம்! சமீப காலமாக, இவர் மீது! பலகாலமாக, நம்மவர் மீது!!

மெஜாரடி வகுப்பாரைத் தூக்கிவிடுகிற காரியத்தைக்கண்டு, பிராமணத்துவேஷம் என்று விஷமப்பிரசாரம் செய்கிறார்கள் என்று தினசரியார் தீட்டுகிறார்.

தூக்கிவிடுகிறார்! மெஜாரடி வகுப்பை!! இந்த வாதத்தை இவர் எவ்வளவு கேலி செய்தார்! மெஜாரடியைத் தூக்கிவிடுவதா! ஏன்! விரல் விட்டு எண்ணக்கூடிய நிலையிலுள்ள பிராமணர்கள்மீது, வீணாகத் துவே

ஷத்தைக் கிளப்பிக்கொண்டு, பார்ப்பனரல்லாதாரின் நலனைப்பாதுகாப்பதாகப் பறைசாற்றுகிறார்கள் இந்த வகுப்புவாதிகள் — இதுவன்றோ முன்பு தினசரியார் தீட்டும் பாணி! இன்று? தூக்கிவிடுகிறார், மெஜாரடி வகுப்பினரை! ஆச்சரியம், இவருடைய மாறுதல் அல்ல! மாறாது இருக்கும், மெஜாரடியின் நிலைமைதான்!! முதல்வகுப்புவாதிக்கும் முதலமைச்சராக ஓமந்தூரார் வீற்றிருப்பதற்கும் இடையே, எவ்வளவோ ஆண்டுகள்! எத்தனையோ முயற்சிகள்! எனினும், இன்றும் மெஜாரடி வகுப்பினர், தூக்கிவிடப்படவேண்டிய நிலை இருக்கிறது! ஏன்? அவ்வளவு கீழே அழுத்தி வைக்கப்பட்டுள்ளனர். தினசரியார் நாட்களிலே, இந்தத் தூக்கிவிடும் பணி தேவை என்றால், தியாகர் நாட்களிலே, இது எவ்வளவு அதிகமாகத் தேவைப்பட்டிருக்க வேண்டும். எண்ணிப்பார்க்கவேண்டுகிறோம், இன்னமும் எண்ணத்தில் தெளிவு பெறாதிருப்பவர்களை. சிறுபான்மையோருக்குத்தான் பாதுகாப்புத்தேவை, பெரும்பான்மையினருக்கு ஏன்? என்று பேசினவர்கள், தினசரியாரின் கருத்தைக் கவனித்துத்தெளிவுபெற வேண்டுகிறோம்.

தூங்கிக்கிடந்தவர்களைத் தட்டி எழுப்பிய தியாகர், விழித்தவர்களைப் பார்த்து, உங்கள் நிலை மிக மிகப்பிற்போக்காக இருக்கிறது, முன்னேறுங்கள் துரிதமாக, சகலதுறைகளிலும், என்று கூறினார். தூக்கிவிடத் தொடங்கினார். இதுதான் அவர் செய்த வகுப்புவாதம்! ஆனால், அவருடைய பேரன்மார் காலத்துச் சொக்கலிங்கனார், தாத்தா கண்டறிந்த திட்டத்தை, தத்துவார்த்த விளக்கத்தோடு செய்துகாட்டுகிறார். "ஜனநாயகம் என்றால் எல்லோருக்கும் சம சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும். குறிப்பிட்டகாரியங்களை குறிப்பிட்ட வகுப்பார்தான் செய்ய வேண்டுமென்ற கட்டாயமோ, ஏகபோக உரிமையோ கிடையாது" என்று தினசரி தீட்டுகிறது. இதே இலட்சியத்துக்காகத்தான், நமது இயக்கம் இடையறாது பாடுபடுகிறது. இந்தக்கருத்துடன், பணிபுரியத்தொடங்கியபோது, வகுப்புவாதி பார்ப்பனத்துவேஷி, வேதநிந்தகன், சாஸ்திர விரோதி, ஆரியவைரி, நாத்திகன், என்று சரமாரியாகத்தூஷணைகள், நமது இயக்கத்தவரைத் துரத்திக்கொண்டுவந்தன. தூற்றும் சொக்கலிங்கங்களும் என்றேனும் ஓர் நாள், இதே கருத்துக்கு வந்து சேருவர் என்ற நம்பிக்கை ஒன்றுதான், நமது இயக்கத்தவரை, இவ்வளவுநிந்தனைகளையும் ஏற்றுக்கொள்ளச்செய்தது. அந்த நம்பிக்கையும் வீண்போகவில்லை. நாம், இன்றுவரை, நீதிக்காக, உரிமைக்காகப் போரிடும் எங்களை அழித்தாலும் சரி, கடைசி மூச்சு இருக்கும்வரை, உரிமைக்குப் போராடுவோம் என்று மட்டுமே கூறிவந்தோர். நெடுநாட்களுக்குப்பிறகு நாம் வகுத்த வழி நடக்கும் நண்பர் தினசரியார் "மைனாரடிகள் மெஜாரிட்டிகளை ஆளமுயற்சிக்கும்போது தான் தகராறுகிளம்புகிறது. லீகர்கள் மைனாரிட்டியாய் இருந்து மெஜாரிட்டியை ஆள முயற்சித்ததால்தான் இந்தியாவில் அமளி குமளி ஏற்பட்டது. அதே தவறை வேறு யாரும் செய்யாமல் ஜாக்ரதையாய் இருக்க வேண்டும்." என்று தீர்மானமாக எழுதியிருக்கிறது! அமளி குமளி! ஜாக்ரதை! — நாம் உபயோகிக்க மறுக்கும் சொற்கள்—தினசரியிடமிருந்து கிளம்புகின்றன! "இருக்கிற ஏகபோக உரிமையைக் காப்பாற்றிக்கொள்ள தேசியம் பேசுவது ராஜீய நாணயமல்ல." என்றும் எழுதியிருக்கிறது.

1940-ல், நமது இயக்க ஏடு, விடுதலை, டிசம்பர் 9-ந்தேதி, இந்த வகுப்புவாதப் பிரச்னையைப்பற்றி,

"பார்ப்பனர் விஷயமாக நாம் கொண்டுள்ள கருத்தைக் கூற விரும்புகிறோம். பார்ப்பனத் துவேஷி என்று கூறப்படும் நாம், பலவிதமான குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகியுள்ளோம். வகுப்புத் துவேஷ விஷத்தை நாம் மக்களிடை ஊட்டுகிறோம் என்றும், வீணான வகுப்பு வித்தியாசங்களைக் கூறி நாட்டிலே பிளவை, பேதத்தை, மாச்சரியத்தை, கலகத்தை உண்டாக்குகிறோம் என்றும், இங்ஙனம் நாம் செய்வதற்குக் காரணம், நமக்கு பட்டம், பதவி மீதுள்ள ஆசை என்றும் பலப்பல கூறுகின்றனர். பட்டமும், பதவியும், காங்கிரசில் சேர்ந்தால், பாடுபடாமல், தொல்லைக்குஆளாகாமல், தொந்திரவை மேற்போட்டுக் கொள்ளாமல், பெறமுடியும் என்பது நமக்கும் நம்மைத் தூற்றும் தோழர்களுக்கும் தெரியும். இருந்தும், பதவியைச் சுலபத்திலே பெறக்கூடிய காங்கிரஸ் கூட்டுறவை விட்டு, பதவி கிடைக்காத, தொல்லை நிரம்பிய 'வகுப்புவாதம்" பேசுவது ஏன்? என்பதைச் சற்றே சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறோம்.

"வகுப்புவாதம்" பேசுவதாக 'ஜாதித்துவேஷத்தை' ஊட்டுவதாக, "பார்ப்பன துவேஷம்" பேசுவதாக, பாமர மக்களிடை, ருசிகரமான பிரசார முறைகளைக்கொண்டு எடுத்துக்கூறி, தேர்தல்களில் நம்மைத் தோற்கடிக்கும் "திறமை" நமது மாற்றார்களிடம் இருக்கிறது என்பது தெரிந்தும், நாம் ஏன், அவர்களை எதிர்க்கிறோம். சும்மா இருந்தால் சுகம் உண்டு என்பதற்கு அவர்கள் ஜாடைமாடை காட்டியும் நாம் ஏன் சமர்ச்சுழலில் விழுகிறோம்.

வெறும் சுகவாழ்வு, சுயநலம் பட்டம், பதவி, இவைகளே தேவை எனில், இவைகளைச் சுலபத்திலே பெறக் கூடிய வழி எது என்பதை மட்டுமே யோசித்து, காலத்துக்கேற்ற கோலமிட்டு வாழ முடியும். ஆனால் எதற்காகப் புயலின் முன் கப்பலைச் செலுத்துவது போல், போராட்டத்தில் ஈடுபடுகிறோம்? எதிரிகளின் சக்தி பாமரரை ஏய்க்கக்கூடிய விதத்தில் இருக்கிறது என்பது தெரிந்தும், நம்மைப் பற்றி தாறுமாறான பிரசாரத்தை தந்திரமாகச் செய்யும் கூட்டம் எது செய்யினும் செய்க, எத்தகைய தொல்லை தரினும் தருக, என்று உறுதியுடன் நாம் இருக்கக் காரணம் என்ன? நமக்கு, நம் மாற்றார்களின் வலிமை தெரியாதா? தெரியும்! பலவிதமான சாதனங்கள் அவர்களிடம் இருப்பதும் தெரியும். பாமரர் அவர்களின் பிரசாரத்துக்குப் பலியாகிறார்கள் என்பதும் தெரியும். நம்மைத் தாக்க அவர்கள் உபயோகிக்கும் கோடாரிக்கு "காம்புகள்" நம்மவரிலேயே கிடைப்பதும் நன்கு நமக்குத் தெரியும். தெரிந்தும் எதிர்க்கிறோம். பொல்லாங்கும் பழியுமே பரிசாகக் கிடைக்கிறது என்று தெரிந்தும் போரிடுகிறோம்! ஏன்? நமக்கு, பித்தமா?

ஆம்! பித்தமே கொண்டுள்ளோம்! ஜாரின் படை பலம், பண பலம், துருப்புகளின் ஈட்டிமுனையின் கூர், தெரிந்தும், லெனின், ஜார் ஆட்சியை ஒழித்தே தீருவேன் என்று ஓயாது கூறி வந்தாரே, உருமாறியும், ஊரூராக அலைந்தும், உற்றார் உறவினரைப் பற்றிக் கவலையற்றும், புரட்சிப் போரை, புது உலக உற்

பத்திப் போரை, நடத்தியே தீருவதென "பித்தம்" பிடித்து அலைந்தாரே, அத்தகைய "பித்தம்" நமக்கு இருக்கிறது என்பதை நாம் மறுக்கவில்லை.

எதிர்த்தோர், பாஸ்ட்டில்லி (சிறைக்கூடம்)யில் இருதய வலியுடன் இருப்பது தெரிந்தும், ஈட்டி ஏந்திய வீரர்கள் குதிரைகளின் மீதேறி, மக்களைக் குத்திக் கொல்வர் என்பது தெரிந்தும், முடி ஆட்சியை எதிர்த்து குடி ஆட்சியை ஏற்படுத்தியே தீருவோம் என்று பிரான்சு நாட்டு மக்கள், புரட்சிப் பித்தம் கொண்டார்களே முன்னம், அத்தகைய பித்தம் நமக்கும் உண்டு.

பல ஆயிரம் ஆண்டுகளாக நாட்டிலே பரவி, ஊன்றி, பாமரரை செயலற்ற, சிந்தனையற்ற உருவங்களாக்கி, உழைக்கவைத்து உறிஞ்சி வாழும் பார்ப்பனீயத்தின், பலம், பயங்கரம், பக்க பலம் யாவும் நமக்கு நன்கு தெரிந்திருந்தும், அதனை ஒழித்தே தீருவோம, என்று "பித்தம்" பிடித்தே நாம் அலைகிறோம். பித்தர் லெனின் சோவியத் நாட்டை கண்டது போல, பெரியார், திராவிட நாட்டைக் காணட்டும், என்று கூறுகிறோம்.

ஏனய்யா இத்தனை ஆத்திரம்? எதற்கு, ஒரு சிறு கூட்டத்தினரான பார்ப்பனர் மீது இத்தனை துவேஷம்? என்று கேட்கிறார்கள் தோழர்கள். பார்ப்பனர் மீது பாய்வது ஒரு வீரமா? வேதியர் மீது ஏன் வீணாக மோதிக்கொள்கிறீர் என்று கேட்கிறார்கள். அவர்களை இங்ஙனம் கேட்க வைக்கும் பார்ப்பனருங் கூட, இது போலவே கேட்கக் கூடும்; ஆகவே அவர்களுக்கும் அவர் தம் அடியார்களுக்குமாகச் சேர்த்தே கூறுகிறோம். நாம் பார்ப்பனர் மீது மோதிக்கொள்ளவில்லை, பார்ப்பனீயத்தை எதிர்க்கிறோம்.

பார்ப்பனீயத்தினால், பார்ப்பனர் என்ற சமூகம், பாடுபடாது வாழவும், பதமாக இருக்கவும் பதவியில் அமரவும், முடிகிறது என்ற "வெறும் பொறாமை" மட்டுமல்ல, நாம் அதனை எதிர்ப்பதற்குக் காரணம்.

பிளேக் பிடித்த வீட்டிலே பாயையும் தலையணையையும் போட்டுக் கொளுத்துகிறார்கள் என்றால், பாய் மீதும், தலையணை மீதும், கோபம், துவேஷம் என்று பொருள் கொள்ள முடியுமா! பிளேக்கால் பிடிக்கப்பட்டவனுக்கு "ஊசி" போடுகிறார்கள் என்றால், டாக்டருக்கு அந்த நோயாளி மீது துவேஷம் என்று பொருள் கூற முடியுமா? அது போல்தான், இந்தப் பழைய பெரிய பூபாகத்திலே, பார்ப்பனீயம் என்ற கொடுமை இருக்கிறது. அது உடலை வாட்டுவது மட்டுமல்ல, உள்ளத்தையே வாட்டுகிறது, அது இருக்கும்வரை, அதன் விளைவுகளாகப்பல வேதனைகள் இருந்தபடிதான் இருக்கும்.

பார்ப்பனீயத்தின் பலனாக, ஒரு பெரிய திராவிட சமுதாயம் சின்னாபின்னப்பட்டுப் போய்க்கிடக்கிறது. பிறவி அடிமைகளாக, பேசும் ஊமைகளாக, நடைப்பிணமாகப் போய்விட்டது, ரோஷமான உணர்ச்சியற்று, தடித்த தோலராகிவிட்டது.

தகப்பனுக்கு மேக வியாதி இருப்பின், பிறக்கும் குழந்தை குருடாகும், என்பர் மருத்துவ நூல் கற்றோர். குருட்டுக் குழவிக்கு, குவலயத்தின் குதூகலக் காட்சி எங்ஙனம் தெரியும்? அதுபோல்தான் திராவிடச் சமுதாயம், பார்ப்பனீயம் எனும் மேக நோயால் பீடிக்கப்பட்டு இருக்கிறது. பிறக்கும் திராவிடன் குருடனாகிறான். எனவேதான் இந்தப் பார்ப்பனீயத்தை ஒழிக்க விரும்புகிறோம்.

ஒற்றுமை, கட்டுப்பாடு வீர உணர்ச்சி, தன்மானம், இவைகள் ஒரு பெரிய சமுதாயத்துக்கு வந்தால்தான் ஏகாதிபத்யத்தை எதிர்த்து வெல்லமுடியும், இக்குணங்கள் இன்று நம் மக்களிடை இல்லாது போனதற்குக் காரணம் பார்ப்பனீயந்தான், எனவேதான் நாம் அதனை எதிர்க்கிறோம். முடியுமா வெல்ல என்பர். முடிவைப்பற்றிக் கவலை இல்லை. கடமை இது என்போம். வெற்றி கிடைக்காதா? என்பர். வெள்ளி முளைக்குது என்போம்" என்று தீட்டிற்று.

வெள்ளி முளைக்குது! என்றோம். எட்டு ஆண்டுகள் பிடித்தன, வெள்ளி, தினசரி நிலையத்திலே இருந்து கிளம்ப. பட்டகஷ்டம் வீண் போகவில்லை. யார், உண்மை வகுப்புவாதிகள் என்பதை நாடு உணரத் தொடங்கி விட்டது. வேதனைக்கு ஆளான ஓமந்தூராரும், வேல் தாக்கிய வேழமெனச் சீறும் தினசரியும், பார்ப்பனீயம் என்பது, பிரித்தானியம் போலவே, ஒழிக்கப்படவேண்டிய முறைதான், என்பதை, ஆண்மையுடன் அறிவித்துவிடவேண்டும். வெ[illegible]ன்பதில் பலன் இல்லை. பார்ப்பனீயத்தைக், காரணம் காட்டி, ஆதரிக்க, எந்த அறிவாளியும் முன் வரமுடியாது. அந்த முறையை முறியடிக்கப் போரிடுவதால், ஓமந்தூராருக்கும், அவரை ஆதரிப்போருக்கும், வகுப்புவாதி என்ற தூற்றலுடன், ஒரு சமயம் நாத்திகர் என்ற ஏசல் கிடைக்கக் கூடும்—ஆனால், நெஞ்சில் கை வைத்து நேர்மையாக நடக்க விரும்பும் 'யாரும், தூற்றலையும் ஏசலையும் பொருட்படுத்தக் கூடாது. பொருட்படுத்தமாட்டார்கள். எவ்வளவு நியாயமான காரியத்தைச் செய்தாலும், அதனால், யாருடைய ஆதிக்கமோ, சுயநலமோ கெடும் என்று தெரிந்தால், அவர்கள், ஏசவும் செய்வர்—தூற்றவும் செய்வர்—எவ்வளவு இன்சொல்லால், அன்பையும் சத்தியத்தையும் உத்தமர் காந்தியார் போதித்தார்? கோட்சே, இதற்கே அவரைக் கொல்லத் துணிந்தானல்லவா! உத்தமர் உண்மைக்காக உயிரைத் தந்த போது, நாம், சாதாரணப் புகழை, பதவியை, இழந்தால்தான் என்ன! நஷ்டம் அல்ல! நாட்டுக்கு, விமோசனம் கிடைக்கும்.

## ஆறுதல் கூறுகின்றோம்

நமது நண்பரும், இயக்க இளைஞர்களில் குறிப்பிடத்தக்க ஒருவருமான தோழர் மு. கருணாநிதி அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் பத்மாவதி அம்மையார் 12-4-48-ல் தமது இளவயதில் இயற்கை எய்தினார் என்ற சோகச்செய்தி கேட்டு வருந்துகிறோம். தமது வாழ்க்கையை இயக்கத்துக்காகவே அர்ப்பணித்துப் பணிபுரிந்துவரும் தோழர் கருணாநிதி தமது வாழ்க்கைக்கும் இயக்கபணிக்கும் உறு துணையாய் நின்றுபணியாற்றிய அன்புத்துணைவியாரை இந்த இளவயதில் பிரியநேர்ந்ததே என்பதைக் கேள்விப்படும் எவருக்கும் ஏக்கமும் துக்கமும் ஏற்பட்டே தீரும்.

தோழர் கருணாநிதி அவர்கள் இப்பொழுது சில காலமாகத் தம்முடைய சொந்த ஊராகிய திருவாரூரில் இருந்துகொண்டே 'முரசொலி' என்ற பத்திரிகையின் வாயிலாக இயக்கப்பணி புரிந்து வருகிறார். இந்த எதிர்பாராத சோகசம்பவம் அவருக்குத் தாங்கமுடியாத கவலையைத் தந்திருக்கும். துணைவியைப் பிரிந்து துக்கத்தில் ஆழ்ந்திருக்கும் தோழர் கருணாநிதி அவர்களுக்கும் அவரது உறவினருக்கும் ஆறுதல் மொழி கூறுகின்றோம்.

## சிங்கம் சிறுநரிமுன்

7-ம் பக்கத் தொடர்ச்சி

ஆயிர முதலாளிகளின் பணப் பைகளின் பருமனைக் கரைப்பது குற்றமேயல்ல. அதோடு முதலாளிகளுக்கு தொழிலாளிகளின் கோரிக்கை எரிச்சலைத்தான் எழுப்பும். அதற்காக தொழிலாளிகளை வதக்குவது அசலான தேசநாசம்! பித்தக்காரனுக்கு மல்கோவா மாம்பழங்கூட கசக்கத்தான் செய்யும். அதற்காக மாந்தோப்புகளையே (காய்க்கவிடாமல்) அறுத்தெறிவிடுவது புத்திசாலித்தனமாகாது.

ஏழைப்பாட்டாளிகள் இல்லாமல், இந்திய சுதந்திரம் வந்துவிடவில்லை. அதே மாதிரி பாட்டாளிகளின் வாழ்வை கசக்கிவிட்டு, எந்த அரசாங்கமும் பிசுபிசுக்க முடியாது. பறவைக்கு இரண்டு இறக்கைகள் எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியம் விவசாயியும் தொழிலாளியும் ஒரு நாட்டிற்கு' முதலாளிகளின் ஜிலு ஜிலுப்பை வைத்து அதிகாரத்தைப் பெரிதுபடுத்த முடியலாம்; ஆனால் தொழிலாளிகளின் ஆத்திரத்தை வளர்த்து எதிரில் நிறுத்திக்கொண்டு, அதிகாரத்தை ஒரு அடி கூட நடத்த முடியாது.

அடிமை இந்தியாவை சுதந்திர இந்தியாவாக ஆக்குவதற்கு, முதலாளிகள் ஓரளவு உதவியிருக்கலாம். ஆனால் இந்த ஒரு உதவியைக்கொண்டே இந்தியா விடுபட்டுவிட்டதென்று வாதிக்க முடியாது ஏழைப்பாட்டாளி, உழைப்பையும், உயிரையும் எண்ணிப்பாராமல் கொட்டியிருக்கிறான். கடைசியில் ஓரளவு உதவிய முதலாளி அரசாங்கத்தின் தோளில் ஏறிச் சவாரி செய்கின்றான். தொழிலாளி காலடியில் கிடக்கிறான்! இதுதான் சுதந்திர இந்தியாவா? இந்த சுதந்திரத்தால் யாருக்கு என்ன நன்மை?

உற்பத்தி பெருகவேண்டும் என்ற அரசாங்கக் குரலுக்கு, முதலாளி மில் கதவுகளை அடைப்பதன் மூலம் பதில் கொடுக்கிறான். அரசாங்கத்தின் மீது கொஞ்சமாவது நம்பிக்கையோ, பயமோ இருந்தால் இந்தப் பதில் எதிரொலிக்க முடியுமா?

கோயமுத்தூரில் அடைப்பட்ட மில்கள் இன்னும் திறக்கப்படவில்லை. மதுரையில் அடைப்பட்ட மில்களும் அப்படியே இருக்கின்றன.

இந்த நிலையில் அரசாங்கம் எழுப்புகிற உற்பத்திப்பெருக்குக் குரலுக்கு அர்த்தமென்னவென்பது ஏழைப்பாட்டாளிகளுக்கு விளங்கவில்லை.''

* * *

ஏழையின் உள்ளத்தை இவ்வளவு உருக்கமாகச் சித்தரித்து ஏக்கக்குரலை காட்டுகிறது, தமிழ்நாடு எனும் காங்கிரஸ் ஏடு. எவ்வளவு ஆழ்ந்த நம்பிக்கையை, நேருவின் இன்றைய போக்கு தகர்த்துவிட்டிருக்கிறது, என்பதைக் கவனிக்க வேண்டுகிறோம்.

முதலாளித்வத்துக்காக வாதாட, போராட, மற்ற நாட்டு அரசியல் மன்றங்களிலேயாவது சில கட்சிகள் உண்டு உதாரணமாக பிரிட்டனில், கன்சர்வேடிவ் கட்சி முதலாளித்வத்தை ஆதரிப்பது. அங்கு, பார்லிமெண்டிலே, கன்சர்வேடிவ் கட்சியினர் ஓரளவேனும் இருப்பதால், தொழிற்கட்சி, முதலாளித்வ முறையைத் தாக்கும் திட்டம் ஏதேனும் கொண்டு வருவதாக இருந்தால் கன்சர்வேடிவ் கட்சி எதிர்க்குமே என்ற கவலைகொண்டு, அதிதீவிர திட்டங்களை, புகுத்த யோசிக்கக்கூடும்—தயங்கக்கூடும். இங்குள்ள நிலைமை என்ன? ஏகபோக மிராசு! எதிர்ப்புக் கட்சியே கிடையாது! சிவத்சவா போன்ற தனி நபர்கள் சிலர் உள்ளனர், ஆனால் காங்கிரஸ் கட்சிக்கு, பார்லிமெண்டில் அசைக்க முடியாத பலம் இருக்கிறது; முதலாளித்வ முறையை ஆதரிக்க ஒரு கட்சி கிடையாது.

எதிர்ப்பு இல்லாதிருக்கும் நிலையில், எண்ணற்ற இளைஞர்களும் பலகோடி பாட்டாளி மக்களும் சமதர்மத் திட்டத்தை வாழ்க்கையின் வசீகரமான குறிக்கோள் என்று கருதி, அதற்காகப் போராடச் சித்தமாக இருக்கிறார்களோ, அப்படிப்பட்டவர்களின் ஆதரவு இருந்தும், காங்கிரசின் பேரால் ஆட்சி நடத்துபவர்கள், முதலாளித்வ முறைக்கு முடிவு காலம் கூறப், பயப்படக்காரணம் என்ன? ஏன் இந்தத் தயக்கம், தடுமாற்றம்? எதிர்ப்புக் கட்சியில்லாத நிலையில் இந்த நடுக்கம் பிறக்கக் காரணம் என்ன?

சர்க்கார் தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொண்டால், புரட்சிகரமான மாறுதல்களைச் செய்தால், சமதர்மத்தை ஒரே அடியாகப் புகுத்தினால், முதலாளிகள், தொழில்களில் பணம்போட மறுத்து விடுவார்களாம்! பிறகு, தொழில்வளரவழியே ஏற்படாதாம்! இவ்விதமான 'வாதமும்; கூறப்படுகிறது, அறிவுத்தெளிவு வளர்ந்துள்ள இந்தக் காலத்திலேயும். உலகிலேயே மிக மிகத் தந்திரசாலி என்று பெயரெடுத்த பிரிட்டிஷ் வல்லரசை வீழ்த்தியவர்கள், என்ற விருது சூட்டிக் கொண்டவர்களா, முதலாளிகள் பணம் போடமாட்டார்கள் என்ற சொத்தைக் காரணம் காட்டுவது!

நேர்மையான காங்கிரஸ் இளைஞன் ஒவ்வொருவனும், வெட்கப்படுவான்! பணத்தை, முதலாளிகள் தொழிலில் போடாமல், புதைத்துவைத்து விடுவாரா? வளராத, உபயோகமாகாத பணம், பணமா? அப்படிப் பணத்தை, வீம்புக்காகவே, பெட்டியில் தூங்க வைக்கிறார்கள் என்றே வைத்துக் கொள்வோம், சர்க்காரால், பொதுமக்களிடம், பணம், புதிய தொழில்களுக்கென்று திரட்டமுடியாதா! அல்லது, முதலாளித்வத்தின் சூதை முறியடிக்கும் சக்தி கிடையாதா! பெட்டியின் அடிவாரத்திலே கிடந்த ஆயிரம் ரூபாய் நோட்டுகளை, அலறி அடித்துக் கொண்டு வெளியே கொண்டு வரவில்லையா, சிலகாலத்துக்கு முன்பு. சர்க்காரால், பெட்டியிலே உறங்கும் பணத்தை, வரவழைக்கவும் முடியும், பணத்தைச் சாகடிக்கவும் சக்தி இருக்கிறது. பொருளாதார பாலபாடம் தெரிந்தவருக்கும் இது தெரியும். பச்சைக்குழந்தை என்றோ, அல்லது பகுத்தறிவற்றவர்களென்றோ இந்நாட்டவரை எண்ணிக் கொண்டுதான், முதலாளிகள், பணத்தைத் தொழிலில் போடமாட்டார்கள் என்று வாதம் செய்கின்றனர். தெரிந்தோ தெரியாமலோ, இந்த வாதத்தை, மந்திரி ஜகஜீவன் ராம், மண்டையிலடித்து நொருக்கிவிட்டிருக்கிறார்.

**"சர்க்கார் கொள்கை, கைத்தொழில்களில் முதல்போட தயங்கச் செய்யும் என்று அடிக்கடி சொல்லப்படுவதை சர்க்கார் கவனத்திற்கு எடுத்துக் கொண்டுள்ளது. அந்த நிலைமை ஏற்பட்டால் சமாளிக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளச் சர்க்கார் தயாராகவே இருக்கிறது."**

இவ்வளவு தெளிவாகவும் உறுதியாகவும், மந்திரியே கூறும்போது, ஏன், நேரு சர்க்கார், முதலாளிகள் முதல் போடமாட்டார்கள், அதனால் தொழில் கெட்டுவிடும் என்று ஓர் சொத்தை வாதத்தைக் கூறுகிறது. ஜகஜீவன்ராம், தமது சொந்தக் கருத்தை கூறவில்லை, சர்க்காரின் சக்தியைக் கூறுகிறார்.

ஆகவே, சர்க்காருக்கு முதலாளிகளின் சாகசத்தையோ, எதிர்ப்பையோ, சமாளிக்கப் போதுமான சக்தியும் உண்டு, அவ்விதம் உண்மையில் சர்க்காருக்கும் முதலாளித்வத்துக்கும் போர்ஏற்பட்டால், சர்க்காருக்குத் துணைபுரிய, கோடிக்கணக்கான மக்களும் உள்ளனர், பாராளுமன்றத்திலேயோ, காங்கிரஸ் இட்டது சட்டம், எதிர்ப்பு இல்லை, எனினும், முதலாளித்வ முறையிடம் மனுச் செய்து கொள்கிறார் சமதர்ம நேரு! சரியா!! இந்தக்காட்சியைக் காணச்சகிக்கிறதா!! உப்புக் காய்ச்சியபோது ஊராளக் காங்கிரஸ் வரதம் இப்படி, முதலாளித்வத்துக்கு பயப்படும், என்று எண்ணிய காங்கிரஸ் இளைஞர் உண்டா? என்னென்ன இன்பக் கனவுகள் அவை, எவ்வளவு விரைவிலே கலைகின்றன! கலைக்கப் படுகின்றன!

இலட்சியம் வேறு! செயல் வேறு!!—நேரு கூறுகிறார்.

இலட்சியம் பேசிய நேருவை நம்பி இரத்தம் சிந்திய இளைஞர்கள், செயல் முறையிலே டாட்டாக்களின் புகழொளி கண்டு, அஞ்சும் நேருவைக் காண்கிறார்கள்! துக்கம், அவர்களுக்கு. சற்று வெட்கமும் இருக்கும். ஆனால், துக்கத்தாலோ வெட்கத்தாலோ, அவர்கள், தங்கள் மனக்குமுறலை வெளியே காட்டத் தவறுவதால், பெருங்கேடு விளையும். நேரு நம்புகிறார், தமது இந்தப் போக்கு, நாட்டினரால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது என்று.

நேருவின் திட்டமாயிற்றே, என்பதற்காக, பேனா வீரர்கள், ஆதரித்து எழுதுகின்றனர். நாளாவட்டத்தில், சமதர்மம், எனும் இலட்சியமே நையாண்டி செய்யப்படத்தக்கதாகவிடக் கூடும். எனவே, காங்கிரஸ் இளைஞர்கள், இலட்சியவாதிகள், உண்மையை உள்ளத்திலே ஒளிய வைத்துக் கொண்டிருந்த பயனில்லை. நோய் முற்றுவதற்குள், உண்மையை எடுத்துக் கூறிவிடவேண்டும். நேரு சர்க்காரின் போக்கை நாடு ஏற்க மறுக்கிறது என்பதைத் தெளிவு படுத்தவேண்டும்.

இப்போது காணப்படும், 'மௌனம்' ஓரளவுக்குத் தைரியத்தைக்கூடத், தந்துவிட்டது பாராளுமன்றத்திலே, தோழர் ரங்கா, பள்ளிச் சிறுவனின் பாணியிலே, ஓர்வாதம் செய்திருக்கிறார்.

**"இப்போதுள்ள சர்க்கார், தேசிய சர்க்கார்தான்—சமதர்ம சர்க்கார்அல்ல. முதலாளித்வமுறையை ஒழிக்கவேண்டுமென்று, மக்களிடம் கூறி அதிகாரம் பெற்றுக்கொண்டு வந்த சர்க்காரல்ல இது"** என்று தோழர் ரங்கா கூறுகிறார்.

ஏழைப்பங்காளர், இலட்சிய வீரர்கள், சமதர்மிகள், என்று 'பூஜித்து', பீடத்தில் அமரச் செய்த, அன்பர்கள், தோழர் ரங்காவின் பேச்சைக் கேட்டுத் திடுக்கிட்டுப் போவார்கள்! அதைவிடத் திடுக்கிட்டுப் போவர், அரசியல் பொருளியல் பிரச்னைகளை அலசிப்பார்ப்பவர்! இப்போதுள்ள சர்க்கார், தேசிய சர்க்காராம், அகவே முதலாளித்வத்தை ஒழிக்காதாம்! அதாவது தோழர் ரங்காவின் அபூர்வமான அகராதிப்படி, தேசியம் முதலாளித்வத்தின் பாதுகாவலன், என்றாகிறது. இதை அவர், வெளிப்படையாகவே கூறினார்—அதுவரையில் நன்றியும் செலுத்தவேண்டும்—ஏனெனில், எதைச் சொல்ல, காங்கிரஸ் நண்பர்கள் கூச்சமடைகிறார்களோ, அச்சப்படுகிறார்களோ, அதைத் தோழர் ரங்கா ஆயாசமின்றிக் கூறிவிட்டார். இப்போதுள்ள சர்க்கார், முதலாளித்வ முறையை ஆதரிக்கும் தேசிய சர்க்கார்! தேசியமும் முதலாளித்வமும் ஒன்றாகி விடுகிற போது, அரசியல் அகராதியில், பாசீசம், நாசீசம் என்று அடைமொழி குறிக்கப்படுகிறது—பாசீசம் வளருகிறது! பல கோடிமக்களின் கண்முன்பாகவே வளர்ந்து கொண்டிருக்கிறது. நாட்டின் எதிர்காலத்தைச் சித்தரிக்கும் பொறுப்புணர்ச்சியுள்ளவர்கள், இப்போது, பாசீசத்தைத் தடுக்காவிட்டால் இன்னும் சில ஆண்டுகளில், தடுக்கக்கூடிய சக்தியையும் இழந்துவிடுவர். புதுடில்லி நகரைத் திருத்தி அமைக்கச் சர்க்கார், பெரும் பணச் செலவில் திட்டம் தயாரிப்பதாகக் கூறுகிறார்கள்—அந்த நகர அமைப்பு எங்ஙனம் இருக்கும் என்பதை நாமறியோம், ஆனால், ஆட்சிப்போக்கு அங்கு உருவாகிக் கொண்டு வருகிறது, அதிலே பெர்லின் தெரிகிறது!

மதிப்புரை

## "காந்தியும்—வள்ளுவரும்"

———

இரண்டாயிரம் ஆண்டுகளாகக் குறள் என்ற தெள்ளு தமிழ் நூல் நம்மிடையேதான் இருந்து வருகின்றது. குறளை முதலில் இருந்து கடைசிவரை மனப்பாடம் பண்ணியவர்களும், கடைசியில் இருந்து முதல் வரை கண்ணை மூடிக் கொண்டு குறள் வெண்பாக்களைத் தலைகீழ் மனப்பாடமாக ஒப்பிப்பவர்களும், திருக்குறள் அவதானிகளும், அதற்கு விரிவுரை விளக்கவுரை எழுதுபவர்களும், அதனைக் கும்பேச வெண்பாவாக்கிக் குறைந்த விலை ரூபா ஐம்பதுதான் என்று குறளின் 'மதிப்பை உயர்த்திக்' காட்டியவர்களும் நம் நாட்டில் இருந்தார்கள்—இருக்கிறார்கள்.

ஆனால், குறளின் கருத்துக்களைக் குற்றமற உணர்ந்து, அதன்படி தங்கள் வாழ்க்கை முறைகளை அமைத்துச், செயல் முறையில்நடந்து காட்டியவர்கள், யாரும் கிடையாது என்ற குற்றச்சாட்டு, நம் நாட்டின் மீது சுமத்தப்படாமல் காப்பாற்றியவர் காந்தியடிகள் ஒருவர்தான் என்பது மிகைபடக் கூறுவதாகாது. காந்தியடிகள், தம்முடைய வாழ்க்கையைத் தமக்கெனக் கொள்ளாமல் பொதுவுக்கெனக் கொண்டவர். இப்பெரியாருடைய பொது வாழ்க்கை, உலகப் பொதுமறையாம் திருக்குறளுக்கு ஓர் எடுத்துக் காட்டாகும்.

இந்நூலாசிரியர், தம்முடைய நான்முகத்தில், "வள்ளுவர் சொன்னார்; காந்தி செய்தார். வள்ளுவரும் செய்திருக்கக்கூடும். அதனை நாம் அறியோம்" என்று கூறியுள்ளார். இது உண்மை. வள்ளுவர் காலம் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டது. எனவே, வள்ளுவர், தாம் சொன்னவைகளைத் தம்முடைய செயலில் செய்து காட்டினார் என்பதை இன்றுள்ள நாம் அறிய முடியாதுதான். அறியாத ஒன்றை அறிந்ததாகக் கூறுவது அறிவுடைமையின்பாற் பட்டதன்று. அதிலும் காந்தியடிகள் போன்ற உத்தமர்களின் செயலை எடுத்துக்காட்டுமிடத்து, அறியாத ஒன்றை அறிந்ததாகக் கூறுவது உண்மையிலேயே வரவேற்கக் கூடியதுமன்று.

ஆனால், இந்நூலில் ஓரிடத்தில், காந்தியடிகளின் தூய்மைக்கும் வாய்மைக்கும் மேற்கோள் காட்டவந்த ஆசிரியர், அரிச்சந்திரனையும், தசரதனையும் நமக்கு நினைவூட்டி,

> "தூய்மை அரிச்சந்திரன்
> போல், தொன்மைத் தசரதன்
> போல் வாய்மையுளான் காந்தி
> மகான்"

என்று கூறுவதன் வாயிலாக அரிச்சந்திரனும், தசரதனும் வாய்மை கொண்ட தூயவர்கள் என்பது தமக்கு நன்றாகத் தெரியும் என்று ஐயந்திரிபற்ற முறையில கூறுகின்றார். இதனை நாம் குற்றமாகக் கொள்ளவில்லை. என்றாலும் வள்ளுவரின் செயல்முறைகளை "அறியோம்" என்று கூறிய ஆசிரியர், அரிச்சந்திரன், தசரதன ஆகியவர்களின் வாய்மை தூய்மைகளை "அறிவோம்" என்று பொருள் கொள்ளும் முறையில் கூறுகின்றாரே என்பதை இங்கு எடுத்துக் காட்டாமல்விட முடியவில்லை. காந்தியடிகளின் அப்பழுக்கற்ற புனிதத் தன்மையை வள்ளுவருடன் ஒப்பிட்டதோடு மட்டும் நிறுத்தியிருந்தால், இந்நூல் இன்னும் அதிக சிறப்புடையதாகத் திகழும் என்பது எமது கருத்து. என்றபோதிலும், இந்நூல் உண்மையிலேயே காந்தியடிகளின் தூய்மையான பொதுவாழ்வையும், அதனால் இந்நாட்டு மக்கள் அடைந்த சிறந்த பயன்களையும் எடுத்து விளக்கி, அவற்றிற்கு மேற்கோளாகத் திருக்குறள் வெண்பாக்களைக் கையாண்டிருப்பது பெரிதும் பொருத்தமும் போற்றக் கூடியதுமாகும்.

பொதுவாழ்வின் உண்மையான சிறப்புக்களை எடுத்துவிளக்கும் இது போன்ற நூல்கள்தான், பொது வாழ்வின் உண்மையை உணர மறுக்கும் இந்நாட்டுக்கு மிகமிக இன்றியமையாதனவாகும். இந்நூலையாக்கித் தந்த தோழர் ராய—சொக்கலிங்கம் அவர்களுக்குத் தமிழ்நாடு நன்றி பாராட்டக் கடமைபட்டுள்ளது.

இந்நூல் கிடைக்குமிடம்:—

பாரதி பிக்ஸர் பாலஸ், காரைக்குடி; தொண்ணூறு பக்கங்கள் கொண்ட இந்நூலின் விலை ரூபா 1—8—0

## விந்தையான பரிசு

4-ம் பக்கத் தொடர்ச்சி

*படைவாகன முதலாம், காவல்*
*மன்னர்க்குரியனவும் எல்லாங்கை*
*வந்துறப் பெற்றார்";*

என்று கூறியுள்ளார். எனவே, அனைத்தையும் ஒருங்குணரும் ஆற்றலை ஆண்டவனிடம் இருந்து பெற்றுக்கொண்ட பெருமாக்கோதையாருக்குத்தான், அந்த வண்ணான் அணிந்திருந்தது திருநீறு அல்லது துணியை வெண்மையாக்கும் உவர் மண்ணு என்பது தெரியாமல் போயிற்றாம். சிவனால் கொடுக்கப்பட்ட வரம்—அருள் உண்மையானதென்றால், அந்த மன்னன், அந்த வெண்ணிற மனிதனைக் கண்டவுடன், "இவன் ஒரு வண்ணான்; இவனுடைய உடம்பு வெண்ணிறமாகக் காட்சியளிப்பதற்குக் காரணம், இவன் தோள்மீது வைத்திருக்கும் உவர் மண்தான்" என்பதை உணர்ந்திருப்பானன்றோ! உவர் மண்ணுக்கும் திருநீற்றுக்கும் உள்ள வேறுபாட்டையே உணர்ந்து கொள்ள முடியாத ஒருவன், யாவையும், அதாவது அஃறிணை உயிர்கள் சொல்லுவனவற்றையும், யாரும், அதாவது உயர்திணை உயிர்கள் சொல்லுவன வற்றையும் தானாகவே உணர்ந்து கொள்ளும் ஆற்றலைப் பெற்றவன் என்பதை எப்படி நம்ப முடியும்? ஒன்று, ஆண்டவனுடைய அருள் இங்கு பேசப்படும் பெருமாக்கோதையார் என்பவருக்குக் கிடைக்கவில்லை என்றோ, அல்லது ஆண்டவனால் அளிக்கப்படுவதாகச்சொல்லப்படும் அருள்—வரங்கள் எல்லாம் அர்த்தமற்றவை என்றோ தானே கருதும்படி இந்நிகழ்ச்சி எம்மைத் தூண்டுகிறது. அஃறிணைப் பொருள்களான மரம் கொடி செடி முதலியனவற்றின் நிலையையும் தானாகவே உணரும் ஆற்றலைப் பெற்றதாகச் சொல்லப்படும் இந்த மன்னனுக்கு, உவர் மண்ணுக்கும் திருநீற்றுக்கும் உள்ள வேறுபாடு தெரியாமற்போன காரணம் என்ன?

*"உவர்மண் உடம்பில் படிந்திருந்த ஒரு வண்ணானைக் கண்டதும், அவன்திருநீறு அணிந்திருக்கின்றான் என்று கருதி அவனடி வீழ்ந்து வணங்கிய சேரர் பெருந்தகையாம் பெருமாக் கோதையாரின் பெற்றியே பெற்றி"*

என்றுபெருமிதங்கொண்டு பூரிக்கும் சைவமெய்யன்பர்கள் தான் இதற்கு விடைகூற வேண்டும்.

இனி, இந் நிகழ்ச்சியால் பெறப்படும் வேறொரு உண்மையும் இதில் தொக்கி நிற்றல் காண்க. அதாவது, பெருந்திரளான மக்களோடு ஊர்வலமாக வந்த மன்னன் கண்ணுக்கு அந்த வண்ணானைத் தவிரத், திருநீறணிந்த வேறுயாரும் தென்படவில்லை என்பதும் இந்நிகழ்ச்சியால் பெறப்படும்உண்மையாகும். அந்தப்பெருங் கூட்டத்தில் அத்தி பூத்தாப்போல் ஒருவன்தான் திருநீறணிந்திருந்தான் என்பதும், வேறு எவருமே திருநீறு அணிந்திருக்கவில்லை என்பதும், எனவேதான், திருநீறு போன்ற வெண்ணிறத்தை ஒருவன் உடம்பில் கண்டதும், திருநீற்றில் அளவு கடந்த பற்றுக்கொண்ட அந்த மன்னன் அதனைத் திருநீறு என்று கருதி விரைந்து அவனடி தொழுதான் என்பதும் பெறப்படுகின்றது. இல்லையேல், அந்தவண்ணானைமட்டும் மன்னன் கும்பிடக்காரணம் என்ன? நாம் கூறும் இந்தக் காரணத்தை வலியுறுத்தும் முறையிலேயே மன்னனும் அந்தவண்ணானிடம் பேசியிருக்கிறார். எப்படியென்றால், மன்னன், தன்னைக் கும்பிட்டதைக் கண்ட வண்ணான், மன்னனை நோக்கி,

"சிறியேன் அடிவண்ணான்"

என்று கூறுகின்றான். அதற்கு, மன்னன், "நீர் திருநீற்றின் திருவேடத்தை நினைப்பித்தீர்" என்று கூறுவதாகச் சேக்கிழாரே பாடியுள்ளார். எனவே, திருநீற்றில் பற்றுக்கொண்ட அந்த மன்னனுக்குத் திருநீற்றின் திருவேடத்தை நினைப்பித்தவன் அந்த வண்ணான் ஒருவன் மட்டுமே என்பது இதனால் பெறப்படும் உண்மையாக இருப்பதால், அந்த ஊர்வலத்தில் கலந்துகொண்ட எவரும் திருநீறு அணிந்திருக்கவில்லை என்ற மறுக்கமுடியாத உண்மை நன்கு வலியுறுதல் காண்க.

பெருமாக்கோதையார் என்ற சேரமன்னன் காலத்தில் தான், மலையாளத்தில் திருநீறு அணியும வழக்கம் ஏற்பட்டதென்பதும் இந்நிகழ்ச்சியால் ஊகித்து உணரக்கூடிய உண்மையாகும். மலையாளத்தில் மட்டுமென்ன, திருநீறு அணிவது சைவ சமயத்தவர்களுக்கு உரிய ஒரு நெறி என்றவழக்கம், பொதுவாக இந்நாட்டில் ஏற்பட்டு ஆயிரத்து முன்னூறு ஆண்டுகள்தான் ஆகின்றன என்று சைவத்தின் மெய்க்காப்பாளர் என்று சொல்லக்கூடிய மறைமலைஅடிகளாரே கூறியுள்ளார்.

எனவே, பெரியபுராணம் என்பதாக ஒருநூலை உண்டாக்கி, அதன் வாயிலாகச் சைவ சமயத்துக்குச் சிறப்பும் அச்சிறப்பை விளக்கும் திருநீற்றுக்கு உயர்வும் கொடுக்க எண்ணிய புராண ஆசிரியர்கள், பெருமாக்கோதையார் என்ற சேரமன்னன் முன்னால் ஒருவண்ணானைக் கொண்டுவந்து நிறுத்தி, அவன் திருநீற்றின் திருவேடத்தை மன்னனுக்கு நினைவூட்டினான் என்றுகதைஎழுதும் குட்டிக்கரண வேலையைக் கெட்டித்தனமாகச் செய்துவைத்துவிட்டனர்.

இவர்களுடைய இந்தத்'திறமை' ஒரு வண்ணானுக்குப் பரிசுவிழும்படி செய்து விட்டிருந்தாலாவது இது எமக்குமகிழ்ச்சி தரும் ஒருநற்செய்தியாகக் கொள்ளலாம். ஆனால், பிறப்பொக்கும் எல்லா உயிர்களையும் சாதி—குலம் என்ற சழக்குரைகூறி உயர்த்தியும் தாழ்த்தியும் வைக்கும் கொடுமைக்கு இந்நிகழ்ச்சி ஒரு எடுத்துக்காட்டாக நின்று, மக்கள் அனைவரையும் சமமாகக் கருதும் சிறந்தபண்பினையாவது உண்டாக்கியிருக்கக்கூடாதா? என்பதனை எண்ணும்போது, எம்முடைய மகிழ்ச்சி மங்கி விடுகிறது. நாம், உண்மையாகவே பரிசு கிடைத்தது வண்ணானுக்குத்தான் என்று நினைத்துஇறும்பூதெய்தினோம். புராணஆசிரியர்கள் கூட மக்களை மக்களாகவே மதிக்கும் மாண்பினைப் பெற்றுவிட்டார்களே என்று எண்ணினோம், ஏமாந்தோம். கிடைத்த பரிசு வண்ணானுக்கல்ல, உவர்மண்ணுக்குத்தான் என்பது தெரிந்தது. மகிழ்ச்சி மங்கிற்று. வண்ணானுடைய உடம்பில் உவர்மண் படிந்திருந்ததைக் கண்ட மன்னன், அவனை, நீறணியும் சிவனடியார் என்று கருதியதாலேயே அவனைக் கும்பிட்டானாம். "பூவின் மணம் நாருக்கும்" என்பதுபோல், உவர் மண்ணுக்குக் கிடைத்த பரிசு வண்ணானுக்கும்கிடைத்ததாகச் சிவஅன்பர்கள் எண்ணிச் சிந்தை மகிழ்வரோ என்னவோ! அல்லது, வண்ணான், துணிகளில் உள்ள அழுக்கைப்போக்கி அவற்றை வெண்மையாக்குகிறான். அதுபோலவே, சிவனும் மக்களிடமுள்ள ஆணவம் மாயை கர்மம் ஆகிய அழுக்குகளைப் போக்கி அவர்களைத் தூய்மையாக்குகிறார். எனவே சிவனையொத்த வண்

(8-ம் பக்கம் பார்க்க)

தொடர் கதை கற்பனைச் சித்திரம்



[11—4—48 தொடர்ச்சி]

எங்கள் குடும்பத்துக்குப் புது மெருகு கிடைத்தது. மூலாம்பூசியவர் ஜெமீன்தார். மேலும் மேலும் மூலாம் பூசிக்கொண்டிருந்தால் தானே, பளபளப்பு இருக்கும்; பலரும் கண்டு போற்றுவர். மூலாம் வெளுத்து விட்டால் என்னாகும். பித்தளையும் செம்பும், பேரீச்சம் பழத்துக்குத்தானே விற்கிறார்கள். அந்தக் கதியேதானே எங்களுக்கும் வரும். அதிலும் எங்கள் நிலை, வெறும் ஏழைகள் நிலைமட்டுமா? இழித்துப் பேசும் உலகின் இம்சைக்கு இனி ஆளாகவேண்டுமே, என்று எண்ணினேன்.

ஜெமீன்தார் இனி எங்களைமேற்கொண்டு வாட்டாது விடுவதானாலும், உலகம் சும்மா இராதே.

“சரியான ஆளய்யா ஜெமீன்தார். இந்தக் கமலா, அவரைக் “குல்லா” போட ஏதேதோ செய்து பார்த்தாள். முடியவில்லை” என்று கேலி செய்பவர்கள் எத்தனைபேரோ.

“பம்பரம் ஆடிக்கிழே விழுந்து விட்டது” என்று பழிப்பவர் யாராரோ.

“கமலா—ஆரஞ்சு விலை இப்போது மலிவுதாண்டா! ஜெமீன்தார் இல்லையே, இப்போது கிராக்கி ஏது?” என்று எவ்வளவு பேர் ஏளனம் செய்வார்களோ என்றெல்லாம் எண்ணவேண்டி இருந்தது. உலகிலே இதுபோல் நடக்கிறதல்லவா?

டாக்டரே! க்ஷயரோகக்காரரின் உடல் தானாகக் கரைவது போல் எங்கள் குடும்பச் செல்வமும் செல்வாக்கும் கரையலாயிற்று.

சம்பவம் நடந்த மறுதினம்எங்கள் வீட்டு மாட்டுத்தொழுவத்தில்கன்றுகள் மட்டுமே இருந்தன. இரண்டு பசுமாடுகளும் இல்லை. கன்றின்குரல் கேட்டுப் பசு, ஜெமீன்தார் வீட்டுத் தொழுவத்திலிருந்து எப்படி வரும்? மாடு மேய்ப்பவனுக்கு ஜாடையாக விஷயம் கூறப்பட்டதும், அவன் மாடுகளைப் பண்ணைக்கு ஓட்டிக் கொண்டு போய்விட்டான். கன்றுகளைப் பிறகு நாங்களே அவிழ்த்து ஆள்வசம் அனுப்பி விட்டோம்.

பத்தரிடம் கொடுத்த பதக்கம் பூச்சுவேலை முடிந்ததாகச் சேதி வந்தது. ஆனால் பத்தர் பதக்கத்தை ‘ஐயா’விடம் அனுப்பிவிட்டதாகக் கூறிவிட்டார்.

மளிகைக் கடைக்குச்சென்ற ஆளிடம், 600 சொச்ச ரூபாய் பழைய பாக்கி இருக்கிறது, அது பைசலான பிறகுதான் சாமான் தரமுடியும் என்று செட்டியார் சேதி சொல்லி அனுப்பினார்.

ஜவுளிக் கடையிலிருந்து பழைய பாக்கிக்கு நோட்டீஸ் வந்துவிட்டது.

கிராமத்துக்குச் சென்றிருந்த எங்கள் தாயார் அறுத்துக் குவித்த நெல்லை அளந்து மூட்டைகள் கட்டி வண்டியில் ஏற்றி அனுப்பிவிட்டு,வீட்டுக்குவந்து சேர்ந்தார்கள். நெல் மூட்டைகளை ஜெமீன்தாரரின் வீட்டுக்குவண்டிக்காரர் கொண்டுபோய்ச் சேர்த்தார்.

எங்கள் வீட்டின்மீது வாரிசு இருப்பதாக வக்கீல் ஒரு நோட்டீஸ் பிறப்பித்துவிட்டார்.

ஒருதினம் முடிவதற்குள் ஜெமீன்தாரரின் கோபம் எங்களைச் சூழ்ந்து கொண்டுவிட்டது. தேள் கொட்டியது கால்விரலில் என்றாலும், உடல்முழுதும் வலி எடுப்பதுபோல, ஜெமீன்தாரர் கமலாமீது கோபித்துக்கொண்டது எங்கள் குடும்பத்தையே வாட்ட ஆரம்பித்தது.

அம்மா, பூரா சேதியையும் கேள்விப்பட்டு, வாடினார்கள். வரலட்சுமியை வேண்டினார்கள். நவக்கிரக பூசை செய்தார்கள். கோயில்களுக்கு விளக்கேற்றினார்கள். அக்காவின் ஜாதகத்தைப் பார்த்தார்கள். ஏழுமாதம் போதாது என்றாராம் சோதிடர். அதற்கு 70 ரூபாய்க்கு ஜாபிதா அனுப்பிவிட்டார். ஏழு மாதங்களுக்குப் பிறகு, கமலா ஒரு குழந்தைக்குத் தாயாவாள். அக்கா கர்ப்பம். ஆரம்பமேகலகத்தில்இருந்தது. அம்மா வேண்டிய தெய்வங்களுக்கு, அக்காவின் கவலையைப் போக்கவேண்டிய வேலையா முக்கியம்!

அம்மா அனுப்பிய தூது பலிக்கவில்லை. ஜெமீன்தாரரின் கோபம் தீரவுமில்லை, குறையவுமில்லை. வளர்ந்தது. அதிலும் யாரோ ஒரு வக்கீல் ஐயர் அக்கா கர்ப்பமாக இருப்பதையும், குழந்தைபிறந்தால் கேஸ் போடுவார்கள் என்றும் கூறிவிட்டாராம். ஜெமீன்தாரருக்கு இது அதிக கோபத்தை மூட்டிவிட்டது. கேசா போடப்போகிறார்கள்? கோர்ட் வாசலிலேயே கொலை நடக்கும் என்றுகூறினாராம்.

இவ்வளவு அவதிகளைச் சகித்துக் கொண்டு இருந்தோம். இரவு படுக்கும்போது, விடிந்தால், உயிருடன் எழுந்திருப்போமா என்ற சந்தேகத்துடனேயே நாங்கள் படுப்பது வழக்கமாகிவிட்டது.

இரவில் திடீரென்றுகற்கள்விழும். வீட்டு வாயிலிலே, காலிகள் கூடிக் கொண்டுகத்துவார்கள். “ஏ! கமலா, கதவைத்திறடி, நேற்றுத்தானே இருபது ரூபாய் கொடுத்தேன்” என்று வெறியன் எவனாவது கேட்பான்.

ஜெமீன்தாரர் படுத்தியபாடு இவ்வளவு அவ்வளவல்ல, ஒவ்வொரு திருவிளையாடலும் அவருக்கு வேடிக்கையாக இருந்தது. எங்கள் வேதனையே அவருக்கு விருந்து. எங்கள் அழுகுரலே அவருக்குச் சங்கீதம். நாங்கள் பயந்து பதறியதே அவருக்குப் பரதநாட்டியம். சிறுத்தை, மானின் கண்கள் எவ்வளவு மனோஹரமாக இருக்கின்றன என்று எண்ணி, விட்டு விடுகிறதா? பஞ்சவர்ணக்கிளியுடன் பூனை கொஞ்சுகிறதா? அதுபோல், எங்கள் குடும்பம் கெடுவதுபற்றி ஜெமீன்தாரருக்கு கவலை ஏது? அவர்தான் எங்க

ளுக்கு வைரியாகிவிட்டாரே. உயிர் வாழ உபயோகமாகும் தண்ணீர் உயிரையே குடித்துவிடுகிறது, குளத்தில் விழுந்து இறக்கையில். வாழ அவசியமாக இருக்கிற நெருப்பே, நமது உடலைப் பிறகு சாம்பலாக்குகிறது. அதுபோல் எமது குடும்பத்தை வளர்த்து, மெருகிட்டுவந்த ஜெமீன்தாரரே, அதனைக் குலைக்க, கெடுக்க, அழிக்கமுனைந்துவிட்டார். யார் அவரைத் தடுக்கமுடியும்?

நளச்சக்கிரவர்த்தி பட்ட கஷ்டத்தைவிடவா? அரிச்சந்திரனுக்கு வந்த ஆபத்துகளைவிடவா? என்று புராணக்கதைகள் கூறி, எங்களுக்குச் சிலர் ஆறுதல் கூற வந்தார்கள். ஆறுதலோ மாறுதலோ கிடைக்கவில்லை. வெந்த புண்ணிலே வேல் நுழைவதுபோல் வேதனையாகவே இருந்தது.

என்னென்ன புராணங்கள் கூறினார்கள்? எதற்கு எடுத்தாலும் ஒரு கட்டுக்கதை! எதற்கும் ஓர் "விதி வசம்" என்ற பேச்சு. ஆண்டவன் மீது பாரத்தைப்போட்டுவிடுவோம், அவனன்றி ஓர் அணுவும் அசையாதுஎன்றதத்துவம். இவைகளை எங்கள் அம்மா நம்பினார்கள். அக்காவுக்கு நாளாகவாக நம்பிக்கை தேய்ந்தது. எனக்கோ ஆரம்பத்திலேயே நம்பிக்கை கிடையாது.

ஆண்டவனுக்குத் தெரியுமோ தெரியாதோ அக்காவின் துயரம்; நான் கண்ணால் பார்க்கிறேன். காரணமின்றி அவள் இக்கதிக்கு ஆளானாள். அவள் சார்பாகப் பேச உலகமே மறுத்துவிட்டது. ஆண்டவன் என்ன செய்கிறார்? என் விஷயத்தை ஜெமீன்தாரருக்கு விளக்கவில்லை என்று அவர் என் எதிரில் வந்தால் கேட்பேன். ஆனால் அவர்தான் எதிரில் வரமாட்டாரே. வந்தால் அல்லவா தெரியும்? எத்தனை எத்தனை கேள்விகளுக்கு அவர் பதில் கூறவேண்டும் தெரியுமோ? திக்குமுக்காடி திணறிப் போய் விடுவார்.

உலகிலே இவ்வளவு சூதுசூழ்ச்சி, வஞ்சனை, வதைத்தல் நடக்கிறதே, பார்த்துக் கொண்டுதானே இருக்கிறார். ஏன்?

ஊரிலே இரண்டு மூன்று களவு நடந்து கண்டுபிடிக்காவிட்டால், போலீசாரைத் திட்டுகிறார்களே, எவ்வளவு கொடுமைகள் நடக்கின்றன உலகிலே, அணுவை அசைப்பதையும் தமது அருளின் சக்தியினால்தான் என்று அனைவரும் கூறும் ஆடம்பரப் பெருமையை அணிந்துகொண்டுள்ள ஆண்டவன், ஏன் இக்கொடுமைகள் நடக்கப்பார்த்துக் கொண்டிருக்கிறார். ஜெமீன்தாரரின் மனதை ஆண்டவன்தான் இளகவைக்கவேண்டும் என்று அம்மா சதா சொல்லுகிறார்கள். அதற்காக, அகப்பட்டதைச் சுருட்டும் பேர்வழிகளுக்கு, அரையும் காலுமாக பணத்தையும் தருகிறார்கள். அக்காவின் அழகே, இளமையே, அவளுடைய சல்லாபமே ஜெமீன்தாரரின் மனதை இளகவைக்க முடியவில்லையே. வேறு எது ஜெமீன்தாரின் மனதை இளகவைக்கும்?

இவ்வளவு தொல்லைகளுக்கும் காரணமான முத்து ஒன்றுமறியாத உத்தமனாக, ஊரில் உலவுகிறான். கேட்கக்கூடாதா ஆண்டவன். நான் இப்படி ஏதாவது கூறினால், எங்கள் அம்மாவுக்குக் கோபம் மூண்டுவிடுகிறது "வேண்டாமடி விமலா. வேலைக்கேற்ற மூளையாக இருக்கிறதே" என்று வேதனையுடன் கூறுகிறார்கள். ஏற்கனவே நொந்து கிடக்கும் அம்மாவின் மனதை மேலும் நோகவைக்கக்கூடாது என்று எண்ணிக்கொண்டு, நான் என் மனதில் தோன்றியவைகளைக் கூறாமல் அடக்கிக்கொண்டேன்.

ஒரு தினம், அம்மாவே கூறினார்கள். எங்கள் ஊரிலே இஷ்டசித்தி விநாயகர் கோயில் பிரபலமானது. பலர், தங்கள் தங்களுக்குத் தேவையான வரம்பெற, அங்கு விளக்கேற்றுவார்கள். அர்ச்சனைகள் நடக்கும். பூஜை விசேஷம். இஷ்டசித்தி விநாயகர் யாராருக்குத் தந்த வரங்கள் என்னென்ன என்பது யாருக்குத் தெரியும்? இஷ்டசித்தி விநாயகர் கோயில் குருக்களுக்கு மட்டும் நல்ல வரும்படி! அது அனைவருக்கும் தெரியும். இஷ்டசித்தி விநாயகரின் அருள் மற்றவர்களுக்குக் கிடைக்க வேண்டுமென வக்கீலாக இருந்து வாதாடிய அந்த வயோதிகர் எனக்குத் தூது விடுத்தார்— 500 ரூபாய் தருவதாகச் சொன்னார். அவர் பெற்ற வரம் அது! அதே கோயிலுக்கு அம்மா, எங்கள் குடும்பக்கஷ்டம் தீரவேண்டும்என்பதற்காக விளக்கேற்றி வந்தார்கள். ஒவ்வொரு நாள் விளக்கேற்றும் போதும் "இஷ்டசித்தி விநாயகரே எங்கள் ஜெமீன்தாரின் மனது இளகி, மறுபடியும் அவர் எனக்கு மருமகப்பிள்ளையாக வரவேண்டும். இந்த விஷயம் கைகூடினால் உமக்கு இருநூறு இளநீர் அபிஷேகம் செய்கிறேன்" என்று அம்மா வேண்டிக் கொள்வார்களாம். மற்றவர்களுக்கு நடத்துவதைவிட அம்மா செய்யச் சொல்லும் அர்ச்சனையை, குருக்கள், சற்று அதிக அக்கரையுடன் செய்தாராம். ஆறு ஏழு இராகங்கள்கூட ஆலாபனம் செய்வாராம் அர்ச்சனையின்போது. கடைசியில் விபூதிப் பிரசாதம் கொடுக்கும்போது தனியாகப் பரிமளம் கலந்தவிபூதிப் பொட்டலம் எனக்குக் கொடுத்தனுப்புவார். நான் குட்டிக்கூரா பவுடர் பூசுபவள். எனவே பொட்டலங்கள் அம்மாவிடமேதான் இருக்கும்! எந்த ஜெமீன்தார், மீண்டும் எங்கள் வீட்டுக்கு வந்து சேர வரம் தரவேண்டுமென அம்மா, இஷ்டசித்தி விநாயகரை வேண்டிக்கொண்டு வந்தார்களோ, அதே ஜெமீன்தாரர், தாசி வீட்டுக்குப் போகும் கெட்ட வழக்கத்தைவிட்டுநல்வழிப்பட்டதற்காக, ஜெமீன்தாரரின் மனைவி, வேலைக்காரியை பிரதிதினமும் அனுப்பி, விநாயகர் கோயிலுக்கு விளக்கேற்றி வந்தார்கள். அம்மா அரையணாவுக்குத்தான் எண்ணெய் வாங்கிக் கொண்டு போவார்கள். ஜெமீன்தாரணி 1 அணா எண்ணெயை விளக்கேற்ற அனுப்புவது வழக்கமாம். வேலைக்காரி கோயிலுக்குக் கால்பாகமும் தன் குடும்பத்துக்கு முக்கால் பாகமுமாகப் பங்கிட்டு விநியோகித்து வந்தாள். இதே கோயிலுக்கு மண்டபத் தெரு மீனலோசனியும் விளக்கேற்றிக் கொண்டுவந்தாள். அவள் வேண்டிய வரம், ஜெமீன்தாரர், தன் வீடு வரவேண்டும் என்பதுதான். பூஜை நேரத்திலும் மற்ற நேரத்திலும் விநாயகர் கோயில் குருக்களுக்கோ, வயது முதிர்ந்துவிடுகிறதே, விமலாவின் நேசம் இன்னமும் கிட்டவில்லையே, இஷ்டசித்தி விநாயகரே இன்னமுமா சோதனைஎன்பதுதான் எண்ணம். இஷ்டசித்தி விநாயகர் எவ்வளவு தவித்திருப்பார்! பக்தர்களின் பூஜைகள் அவரை எவ்வளவு பாதிக்கச் செய்திருக்கும், பாவம்! இதையெல்லாம் எடுத்துச் சொன்னால் அம்மாவுக்குக் கோபம். அந்தக் குருக்கள் ஒருநாள் எங்கள் வீட்டுக்கு வந்தார். அவரிடமே இதனைக் கூறினேன். அம்மாவும் இருந்தார்கள்

அவர், வயிறு குலுங்க நகைத்துவிட்டு, 'பலே! குட்டி கேட்கிற கேள்வி சரியான கேள்விதான்" என்று கூறிவிட்டு, "அவாளவாள் கர்மானுசாரம் காரியாதிகள் சம்பவிக்கும். பூஜையும் புனஸ்காரமும், மனச் சாந்திக்குத்தான். முற்றுமுணர்ந்த ஞானிகளுக்கு, மனந்தான் கோயில், மூச்சுத்தான் மணியோசை" என்று கூறினார். "அது நிஜமானால் நீர் குருக்கள் வேலை செய்வது வீண்தானே" என்று நான் மடக்கினேன். "வீண் என்று சொல்ல முடியுமா? இதெல்லாம், பெரியவாள் செய்து வைத்த ஏற்பாடுதானே" என்று மறுபடி பழையகதை பேசினார். அவரது பேச்சைவிடப், பார்வை அவரதுபித்தத்தை அதிகமாகக்காட்டிற்று. அவரது பார்வையில் அமோகமான பசி இருந்ததைக் கண்டு, நான் முதலில் பயந்தேன். பிறகு நம்பிக்கை கொண்டேன். என்னை இரையாகக்கொள்ள வந்த இவனைக்கொண்டே இஷ்டசித்திவிநாயகர் செய்யவேண்டுமென அம்மா எதிர்பார்த்த காரியத்தைச் சாதித்துக்கொள்ள வேண்டுமெனத் தீர்மானித்தேன். அந்த குருக்களின் பெயரும் கணபதி சாஸ்திரிகள்!

அந்த வயோதிகனை நான் ஏற்றுக்கொள்ளச் சம்மதித்தேன். இது எங்கள் குலத்திலே ஆச்சரியமான சம்பவமல்ல. ஏன்? பெண்கள் உலகத்திலேயே இது ஆச்சரியமானதல்ல. சர்வ சாதாரணம். மூன்றும் தாரம் நான்காம் தாரமாகப் பச்சைப் பசுங்கிளி போன்ற பெண்களை, படு கிழவருக்கு மணம் செய்வித்ததை நான் பார்த்து இருக்கிறேன். நாடு ஏற்றுக்கொண்டு தான் இருக்கிறது. தேளையும் பாம்பையும் உலகம் ஒழித்தா விட்டது? அதுபோல் கொடிய வழக்கங்களையும் ஒழித்து விடத்தான் இல்லை. துஷ்ட ஜந்துக்களை கண்டால் கொல்வார்கள். துஷ்ட வழக்கங்களையோ இந்த நாட்டிலே துதிக்கிறார்கள். தத்துவம் கூறவோ தயார், தயார் என்று பலர் இருக்கின்றனர். மணப்பெண்ணின் கூந்தல் சுருண்டு வளைந்து இருக்கும். வசீகரம், அந்த வளைவுகள் வழியாக வெளிவந்து வீசும். மணமகனின் தேகம் சுருங்கிக் கிடக்கும், முகம் வீங்கிக் கிடக்கும், வயோதிகமும் விகாரமும், வாடைபோல் வீசும். இருந்தாலும் அக்னி சாட்சியாக, அந்தணர் ஆசிகூற, அகலிகை அருந்ததி சாட்சியாகத் தாலிகட்டத் தயங்குபவர்யார்? நடக்கிறதே உலகத்தில். நானாவிதமான விஷயங்கள் பற்றி நாள் தவறாது பேசும் நாக்குகள், வளைந்துபோய் விடுகின்றனவே இதுபற்றி கண்டிக்கச் சொன்னால். பெண்கள் சமூகமே, ஆண்களின் விளையாட்டுச் சாலையாக இருக்கும் போது, காசு கொண்டு ஆசையை அளிக்கக் கடவுளால் உண்டாக்கப்பட்ட தாசிகள் கூட்டம், பெண்கள் பொதுவாக படும்பாட்டைவிட சற்று அதிகமாகப் படுவதிலே ஆச்சரியமில்லை. அதிலும், செல்வத்தை இழந்து ஜெமீன்தாரின் சீற்றத்தால் சிதைந்து வரும் குடும்பத்தைச் சேர்ந்த நான், ஒரு வயோதிகனுக்கு விளையாட்டுக் கருவியாகச் சம்மதித்தது ஆச்சரியமாகுமா?

கணபதி சாஸ்திரிகள், விநாயகரைக்கூட அவ்வளவு வாத்சல்யத்துடன் அர்ச்சித்திருக்க மாட்டார். என்னை அப்படி அர்ச்சிப்பார்! அவருக்கு என் இளமையும் அழகும் சோகத்தால் ஏற்பட்ட பிரத்தியேகமான சோபிதமும் அவ்வளவு மயக்கத்தை ஊட்டி விட்டது.

இரண்டு மூன்று ஆண்களின் நடவடிக்கைகளை நான் கண்டுவிட்டேன் அல்லவா? முத்துவின் மோசடி, ஜெமீன்தாரரின் சேட்டைகள், பாட்டு வாத்தியார் மகனின் பகல் வேடம், முதலியவற்றைக் கண்ட நான், ஒரு தீர்மானத்துக்கு வந்தேன். இப்போதுள்ள முறைக்கு, அதைத் தவிர வேறு தீர்மானத்துக்கு அநேகமாக எந்தப்பெண்ணும் வரமாட்டாள் என்றே நான் இன்னமும் நினைக்கிறேன்.

ஆடவன் பெண்ணின் அழகில் சொக்கி விடுகிறான். அழகு என்பதற்கு ஒவ்வோர் ஆடவன் ஒவ்வொரு விதமான பொருள் கொள்கிறான். அதுமட்டுமல்ல. ஒரே ஆடவனுக்கு ஒருசமயம் ஒன்று அழகாகத் தோன்றும், மறுசமயம் மற்றொன்று தோன்றும். அவனது மனம், பெண்ணின் அழகில் மயங்கிக்கிடக்கும் போது அவன் தங்கக் கம்பிதான். ஆனால் பெண்ணினால் அவன் அடையவேண்டிய பலன்களை அடைந்து சலித்தாலோ, அல்லது அவனது கண்களும் கருத்தும், வேறு மாதை நாடிவிட்டாலோ, அவன் அந்த மாதின் இருதயத்துக்கே ஈட்டியாகத் தயங்குவதில்லை. நமது தங்கக்கம்பி இன்று ஏன் நமது மனதைத்துளைக்கும் ஈட்டியாகிவிட்டான் என்று அவள் எண்ணிப்பயனில்லை. ரோஜாவில் உள்ள தேனை உண்டு, மல்லிகைக்குச் செல்கிறது வண்டு. அதற்குத் தேவை,

(2-ம் பக்கம் பார்க்க)

## திருமண அழைப்பு.

அன்புடையீர்!

21—4—48 புதன்கிழமை காலை 8-30 மணிக்கு

கும்பகோணம் V. சின்னத்தம்பி அவர்கள் புதல்வி

**C. மங்கையர்க்கரசி**

கரூர், P. பெருமாள் அவர்கள் புதல்வன்

**P. சோமசுந்தரம்**

ஆகிய இருவரின் வாழ்க்கை ஒப்பந்தம் கும்பகோணம் டவுன் "டயமண்ட்சினிமா" கொட்டகையில் திருமணப்பதிவு இலாக்கா அதிகாரி அவர்களால் பதிவும், மற்றும் பெரியார் ஈ. வே. ராமசாமி, நகைச்சுவை அரசர் N. S. கிருஷ்ணன், C. N. அண்ணாத்துரை, ஈ. வி. கி. சம்பத், K. R. ராமசாமி ஆகியோரின் சொற்பொழிவும் நடைபெறும். அன்பர்கள் வருக.

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravida Nadu" Press,
95, Tirukkachinambi Street. Conjeeveram.